







# வருடாந்த அறிக்கை 2018

# தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| **தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பற்றி** | **3** |
| எமது தொலைநோக்கு | 4 |
| எமது செயற்பணி | 4 |
| நாம் யார்? | 5 |
| எமது பெருநிறுவனப் பெறுமானங்கள் | 6 |
| நிதியியல் சார்ந்த சிறப்பம்சங்கள் | 7 |
| மூலோபாய நோக்கங்கள் | 8 |
| தலைவரின் ஆசிச் செய்தி | 10 |
| பிரதான நிறைவேற்று அதிகாரியின் செயற்பாடுகள் குறித்த மீளாய்வு | 12 |
| **முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும்** | **13** |
| சுற்றுச்சூழல் மீளாய்வு | 14 |
| நிதி மீளாய்வு | 15 |
| பிரிவு ரீதியான மீளாய்வு | 18 |
| **ஆளுகை மற்றும் உள்ளக கட்டுப்பாடு** | **25** |
| நிறுவன ஆளுகை | 26 |
| 2018 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் | 30 |
| பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் விபரத் திரட்டு | 32 |
| பெருநிறுவன மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவினர் | 34 |
| நிறுவன இடர் முகாமைத்துவம் | 36 |
| நிலைத்தன்மை அறிக்கையிடல் | 40 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 42 |
| **நிதி அறிக்கைகள்** | **45** |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 46 |
| நிதி நிலைக் கூற்று | 75 |
| **மேலதிகத் தகவல்கள்** | **121** |
| ஒரு பார்வையில் தசாப்தம் | 122 |
| பெருநிறுவனத் தகவல் | 124 |



# தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பற்றி

# எமது தொலைநோக்கு

காப்புறுதி அளிக்கக்கூடிய அனைத்துத் துறைகளுக்கும் பாதுகாப்பினை வழங்கும் வலையமைப்பொன்று.

# எமது செயற்பணி

கீழ்க்காணும் செயற்பாடுகளினூடாக இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பினை வழங்குதல்:

- ✓ சமூகத்திலுள்ள அனைத்துத் தேவையுடைய துறைகளுக்கும் தாங்கிக் கொள்ளக்கூடிய, வினைத்திறன் வாய்ந்த மற்றும் முன்னேற்றகரமான காப்புறுதித் திட்டத்தை வழங்குதல்.
- ✓ ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் ஏனைய ஏற்பாடுகளினூடாக மாற்றமுறும் தேவைகளிலிருந்து எழுகின்ற உயர்ந்தளவிலான இடர்களினை ஈடு செய்யும் வகையில் உள்நாட்டு சந்தைகளுக்கான தீர்வுகளை வழங்குதல்.
- ✓ உள்நாட்டு காப்புறுதிச் சந்தைக்கு மேலதிக சக்தியினை வழங்கும் நோக்குடன் இலங்கையில் மீள் காப்புறுதி சந்தையினை உருவாக்குதல்.

# நாம் யார்

2006 ஆம் ஆண்டு இலக்கம் 28 இனால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கொண்டு வரப்பட்டது. பொருளாதார ரீதியாக அதன் பங்களிப்புக்களாவன, மீள்காப்புறுதி, வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி, அக்ரஹார சுகாதாரக் காப்புறுதி, சுகாதாரக் காப்புறுதி, இயற்கை அனர்த்தக் காப்புறுதி உள்ளடங்கலான காப்புறுதித் திட்டங்களைக் கொண்டுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்திற்கமைய வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி நிதியம் முதலில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் நிர்வாகிக்கப்பட்டு வந்துள்ளதுடன், கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத ஆபத்துக்களுக்கான காப்புறுதியாக தமது கொடுப்பனவுகளை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கு வழங்க வேண்டி ஏற்பட்டன. 1791/4 இனையுடைய 2012 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலிற்கமைய சகல ஆரம்ப மட்ட காப்பீட்டாளர்களை ஆரம்ப கட்ட காப்புறுதி ஒப்பந்தங்களின் மூலம் எழுகின்ற தமது ஒட்டுமொத்த மீள் காப்புறுதி தவணைக் கட்டணத்தின் 30% இனை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கு வழங்குதல் வேண்டும். தற்போது ஆரம்ப கட்ட காப்பீட்டாளர்களுக்கு மீள்காப்புறதியை வழங்கும் ஏகபோக ஒரே நிறுவனமாக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் திகழ்கின்றது. அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம் அரசாங்க நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைக்கு ஏற்ப 12/2005 இனால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதோடு, அது 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதில் விவாகமான உறுப்பினர்களின், வாழ்க்கைத் துணைக்கும் பிள்ளைகளுக்கும் ( அவர்கள் விவாகமற்றவர்களாயின, வேலைவாய்ப்பற்ற மற்றும் 21 வயதுக்குக் குறைந்தவர்கள் மாத்திரம்) மற்றும் விவாகமற்ற உறுப்பினர்களின், பெற்றோர்களுக்கு (பெற்றோர்கள் 70 வயதினை விடக் குறைவாயின்) நன்மைகள் வழங்கப்படும்.

குறைந்த தவணைக் கட்டணத்திற்கு பல நன்மைகளை வழங்கும் முக்கிய போட்டித்தன்மை மிக்க அநுகூலங்களை வழங்குவதோடு, உரிமங்களை ஏற்றல் மற்றும் செலுத்தல் தொடர்பாக நோக்குகையில் எமது நாட்டினுள் காணப்படும் மிகச் சிறந்த நிறுவனமாக விளங்குகின்றது. புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எமது உள்ளக மற்றும் வெளிவாரியான வினைத்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு, கீழ் மட்டம் வரை கவனம் செலுத்தும் நிறுவனமாகவும் காணப்படுகின்றது.

# எமது பெறுநிறுவனப் பெறுமானங்கள்

எமது அடிப்படை நிறுவனப் பெறுமானங்கள் ஆறு ஆகும். நாம் எமது வர்த்தகத்தில் பிரவேசிக்கும் முறைமைக்கு நிரந்தர அடிப்படையிலும் வழிகாட்டலை தருகின்றோம்.



# நிதியியல் சார்ந்த சிறப்பம்சங்கள் -2018

| | |
|---|---|
| (அ) வரிக்குப் பின்னரான இலாபம் | ரூபா. 3.1 பில்லியன் |
| (ஆ) மொத்த சொத்துக்கள் | ரூபா. 16 பில்லியன் |
| (இ) திரட்டிய நிதிக்கான பங்களிப்பு | ரூபா. 2.75 பில்லியன் |
| (ஈ) முதலீட்டின் மீதான நலன்கள் | 20.4% |




| | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| எழுதப்பட்ட மொத்த தவணைக் கட்டணம் | 9,683,874,748 | 9,071,278,467 |
| தேறிய சம்பாதித்த தவணைக் கட்டணம் | 13,653,431,467 | 11,613,828,982 |
| வரிக்கு முந்தைய இலாபம் (ீடீவு) | 3,288,839,528 | 1,077,185,612 |
| வரிக்குப் பின் இலாபம் (ீயுவு) | 3,183,238,866 | 976,233,935 |
| மொத்த சொத்துக்கள் | 15,595,192,598 | 18,552,675,429 |
| முதலீட்டின் மீதான நலன்கள் (மூ) | 20.4% | 5.2% |

# மூலோபாய நோக்கங்கள்

1. தொழில்முறை மற்றும் வாடிக்கையாளர் நட்பு மீள்காப்பீட்டாளராக இருப்பதன் மூலமும், சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப மிக உயர்ந்த சேவைத் தரங்களை பூர்த்தி செய்வதன் மூலமும் இலங்கையின் காப்புறுதிச் சந்தையில் மீள்காப்பீட்டுத் தேவைகளுக்கு மொத்த தீர்வுகளையும் வழங்குதல்.
2. சர்வதேச மீள்காப்புறுதிச் சந்தையில் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டாளராக மாறுவதற்கு அமைப்பின் சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் ஐந்து ஆண்டுகளுக்குள் சர்வதேச மீள்காப்புறுதி வழங்குநராக மாறுதல்.
3. 2019 ஆம் ஆண்டினுள் இலங்கையில் மிகவும் விரும்பக்கூடிய மீள்காப்புறுதி நிறுவனமாக மாறுவதற்கும், 2021 ஆம் ஆண்டாகும் போது ரூபா. 50 பில்லியன் தேறிய பெறுமதியுடன் கூடிய ஆசிய பிராந்தியத்தில் முன்னணி மீள்காப்பீட்டு நிறுவனமாகவும் மாறுதல்.
4. சமூகத்தில் ஆபத்துக்களுக்கு முகங் கொடுத்து பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் ∴ ஏழை மக்களின் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் வணிக பொது காப்பீட்டாளர் ஒருவருக்கு காப்புறுதித் தீர்வுகளை வழங்காத ஆபத்து சார்ந்த துறைகளில் கவனம் செலுத்துதல்.
5. இலங்கையில் உள்ள விவசாயிகளின் விவசாயம் சார்ந்த வணிகங்கள் மற்றும் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்காக விவசாயத் துறையிலும் அதன் பங்குதாரர்களுக்கும் காப்புறுதித் தீர்வுகளை வழங்குதல்.
6. அரசாங்க ஊழியர்கள் மற்றும் வேறு தேவைப்பாடு கொண்ட குழுவினர் ஆகிய இரு பிரிவினருக்கும் சேவை செய்யும் நாட்டில் மிகவும் வினைத்திறனானதும் பயனுறுதி வாய்ந்ததுமான சுகாதார காப்பீட்டு வழங்குநராகவும், உரிமை கோருநராகவும் மாறுதல்.
7. இலங்கையில் தகவல் மையமாகவும், தொழில்முறை காப்பீட்டு அறிவு மையமாகவும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தை நிறுவுதல்.
8. பொது காப்பீட்டு வணிகத்தினால் சிறந்த விளைவுகளைப் பெறுவதற்காக அரச நிறுவனங்களுடனான உறவை வலுப்படுத்துவதன் மூலம் சகல அரச நிறுவனங்களுக்கும் மிகவும் விருப்பமான காப்புறுதி வழங்குநராக மாறுதல்.
9. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு நிரூபணமான அர்ப்பணிப்புடன் ஒரு பசுமை நிறுவனமாக மாறுவதன் மூலம் சமூகம் மீதான பொறுப்புணர்வைப் பெறுதல்.
10. பொது காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி ஆகிய இரண்டிலும் விரைவான உரிமை கோரல் தீர்வை எளிதாக்கும் ஒரு மாறும் அமைப்பை நிறுவுவதன் ஊடாக வாடிக்கையாளர் திருப்தியை பெறுதல்.
11. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நிதியைப் பலப்படுத்தல் மற்றும் அதன் இஸ்தீரத்தன்மையை எடுத்துக் காட்டும் சர்வதேச நிதியியல் தரத்தைப் பெறுதல்.
12. வெளிப்படைத்தன்மையை நிலைநிறுவத்துவதற்கு ஒரு தொழில்முறை கணக்கியல் மற்றும் அறிக்கையிடல் முறை மற்றும் கணக்காய்வுச் செயற்பாட்டை நிறுவுதல்.

13. பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு மாற்றீடுகளில் ஈடுபடுவதற்கான அதிகாரத்தைப் பெற்றதன் பின்னர் வரையறுக்கப்பட்ட முதலீட்டுச் செயற்பாட்டினை மாற்றமுறும் வழிகாட்டிச் செயல்பாடாக மாறுதல்.
14. தற்போது அக்ரஹார காப்புறுதிச் சலுகைகளை அனுபவித்து வரும் அரச ஊழியர்களுக்கு ஒரு சிறந்த சேவையை வழங்குவதற்காக சுகாதாரத் துறையுடன் இணைந்து மூலோபாயக் கூட்டு முயற்சியில் நுழைதல்.
15. மாவட்டச் செயலகங்கள் போன்ற அரசாங்க செயற்பாட்டுக் கட்டமைப்புக்களைப் பயன்படுத்தி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தை அணுகுதல் மற்றும் தெரிவுநிலையை அதிகரித்தல்.
16. அரசாங்க துறையின் கீழ் இருக்கும் இதே போன்ற நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்.
17. இலங்கையில் காப்புறுதித் துறையில் உள்ள நிபுணர்களால் பணியாற்றுவதற்கு மிகவும் விருப்பமான அமைப்பாக மாறுவதற்கு வினைத்திறனான முகாமைத்துவக் கொள்கையையும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மனித மூலதனத்தையும்வளப்படுத்துவதற்கான ஒரு செயன்முறையை தாபித்தல்.

# தலைவரின் ஆசிச் செய்தி

**2018 ஆம் ஆண்டின் தற்போதைய வருடாந்த அறிக்கை**

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்கக் கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். பல் ஆண்டுகளாக தேசிய முக்கியத்துவத்தில் முதன்மைக் கவனம் செலுத்தி, எமது பங்குதாரர்களுக்கு குறிப்பிடத்தக்க பெறுமானங்களைச் சேர்த்து உருவாக்கும் நோக்கில் நாம் கூட்டணிகளாகவும் பங்குதாரர்களாகவும் ஒன்று சேர்ந்துள்ளோம். பலமிக்கவர்களாக முன்னேறிச் செல்வதற்கு இது மிகவும் பிரதான விடயமாக காணப்படுகின்றது.

**தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் செயலாற்றுகை மற்றும் பங்களிப்புக்கள்**

மந்தகதி நிலைக்கு உட்பட்டிருக்கும் காப்புறுதி சந்தையின் செயற்பாடுகளும் கூட, 2017 ஆம் ஆண்டில் ரூபா. 9.1 பில்லியன் அளவு எழுதப்பட்ட மொத்த காப்புறுதிக் கட்டுப்பணத் தொகை 2018 ஆம் ஆண்டில் ரூபா. 9.1 பில்லியன் ஆக மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இவ்வெற்றியை மேலும் ஈர்க்கக்கூடிய வகையில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 0.976 பில்லியனைக் கொண்ட வரிகளின் பின்னர் இலாபமாக 2018 ஆம் ஆண்டில் ரூபா. 3.183 பில்லியனாக மாற்றப்பட்டது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் AA-(lka) பிச் தரப்படுத்தலினைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு, அது 2018 ஆம் ஆண்டில் நிதியியல் இலக்குகளை மிகச் சிறந்த முறையில் உறுதிப்படுத்தியும் உள்ளது.

**மதிப்பேற்றம்**

இந்த நிறுவனத்தை வழிநடாத்தும் கௌரவ நிதி அமைச்சின் நிதியமைச்சருக்கும், வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்பை வழங்கி வரும் செயலாளருக்கும் மேலதிக செயலாளருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். திறைசேரிச் செயலாளர் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் நெருக்கமாக செயற்படும் ஏனைய திறைசேரி அதிகாரிகள் அனைவரிடமிருந்தும் கிடைத்த ஆதரவை நான் இங்கு நினைவூட்டுகின்றேன். காப்புறுதித் துறையின் கட்டுப்பாட்டாளர்களான இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் (IRCSL) தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் ஊழியர்களுக்கு எனது நேர்மையான பாராட்டுக்களையும் கௌரவத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.இறுதியாக, எனது சக சபை உறுப்பினர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய ஊழியர்களின் உறுதியான அர்ப்பணிப்பு மற்றும் ஆண்டு முழுவதும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டமைக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.



மவாஹிப் மஞ்ஜுத்
தலைவர்
27.09.2020

# பிரதான நிறைவேற்று அதிகாரியின் செயற்பாடுகள் குறித்த மீளாய்வு

காப்புறுதித் துறைக்கு சாதகமற்ற சூழ்நிலை இருந்தபோதிலும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் தவணைக் கட்டண வளர்ச்சி, இலாப வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர் சேவை ஆகியவற்றின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் திருப்திகரமான செயற்திறனை பதிவு செய்ய முடிந்ததுள்ளது என்பதனை அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். நம் நாடு பாரிய அளவிலான வெள்ளத்தை எதிர்கொண்ட 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2018 ஆம் நிதியாண்டு செயற்பாட்டு ரீதியாகவும் நிதியியல் கண்ணோட்டத்திலும் ஒப்பீட்டளவில் பாராட்டத்தக்க ஆண்டாக அமைந்திருந்தது. கடந்த இரு வருடங்களினுள் வெள்ளப் பெருக்கு காரணமாக பெரும் உரிமைகோரல்களை செலுத்தியதன் பின்னரும், நிதி நிலைத்தன்மையை வெளிப்படுத்திய வகையில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பிட்ச் ரேடிங் லங்காவிடமிருந்து AA-கடனை தரப்படுத்துதலைப் பெற்றுக்கொண்டதாக இங்கு சுட்டிக்காட்டுவது முக்கியமானதாகும்.

### நிதியியல் முன்னேற்றம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தனது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியான சேவையை வழங்கி வரும் அதே வேளையில் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதன் நிதி வலிமையை மேம்படுத்துவதற்காக தனது நிதி இலாகாவை 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதியல் மிகத் திறமையாக நிர்வகித்து வந்துள்ளது. 2017 ஆம் ஆண்டு எழுதப்பட்ட மொத்த கட்டுப்பணம் ரூபா. 9.071 ஆக காணப்பட்டதோடு, அது 2018 ஆம் ஆண்டில் ரூபா. 9.683 பில்லியனாகும், இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 6.8% ஆன வளர்ச்சியைக் காட்டுகிறது. மீள்காப்புறுதி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கை என்பன எழுதப்பட்ட மொத்த கட்டுப்பணத்தின் உயர்வுக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது. இதேபோல், 2017 ஆம் ஆண்டில் ரூபா. 11.613 பில்லியனாகக் காணப்பட்ட தேறிய சம்பாதித்த கட்டுப்பணம் 2018 ஆம் அண்டு ரூபா. 13.653 பில்லியனாகும் இது 18% வளர்ச்சியைக் காட்டுகின்றது.

மறுபுறம், 2017 ஆம் ஆண்டு ரூபா. 11.455 பில்லியனாகக் காணப்பட்ட தேசிய நலன்கள் மற்றும் உரிமை கோரல்கள் 2018 ஆம் ஆண்டில் ரூபா. 9.763 பில்லியனாகும் இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 15% ஆன வீழ்ச்சியைக் காட்டுக்கின்றது. இதற்குக் காரணம், 2018 ஆம் ஆண்டில் குறைவான எண்ணிக்கையில் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவுகள் மற்றும் 2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பாரிய அளவிலான வெள்ளப்பெருக்கும் அதைக் தொடர்ந்து அவ்வாண்டில் வெள்ளக் கோரிக்கைகளுக்குான உரிமை கோரல்களின் எண்ணிக்கையின் அளவு அதிகரித்துக் காணப்பட்டதுமாகும். இதன் விளைவாக, 2017 ஆம் ஆண்டில் ரூபா.1.176 பில்லியனாக இருந்த மொத்த விரிவான வருமானம் 2018 ஆம் ஆண்டு ரூபா. 3.303 பில்லியனை அடைந்திருந்தது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 180% ஆன அதிகரிப்பைக் காட்டுகின்றது.

நிதி நிலையைக் கருத்திற் கொள்ளும் போது, 2017 மற்றும் 2018 ஆம் அண்டுகளில் மொத்த பங்குகள் மற்றும் மொத்த சொத்துக்கள் முறையே ரூபா. 7.146 பில்லியனாகவும் ரூபா. 6.956 பில்லியனாகும் மற்றும் ரூபா. 18.553 பில்லியன் முதல் ரூபா. 15.595 பில்லியனாகும். மேலும், 2017 ஆம் ஆண்டு ரூபா. 11.406 பில்லியனாக இருந்த மொத்த கடன் தொகை 2018 ஆம் அண்டில் ரூபா. 8.639 பில்லியன் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

2017 ஆம் ஆண்டு காணப்பட்ட ரூபா. 8.161 பில்லியன் ஆக இருந்த நிதிச் சொத்துக்கள் 2018 ஆம் ஆண்டாகும் போது அது ரூபா. 10.674 பில்லியன் வரை 31% இனால் மிதமான அதிகரிப்பைக் காட்டுகின்றது. இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணம் யாதெனில், 2018 ஆம் ஆண்டில் மீள்காப்பீட்டாளர்களிடமிருந்து ஏராளமான மீள்காப்புறுதி மீட்டெடுப்புக்கள் கிடைத்தமையாகும். மேலும், சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும்

உபகரணங்களின் பெறுமதி 2017 ஆம் ஆண்டில் ரூபா. 39.471 மில்லியன் ஆக இருந்ததோடு, அது 2018 ஆம் ஆண்டு ரூபா. 29.363 மில்லியனாகும் இது 26% இனால் வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

AA- இன் பிட்ச் மதிப்பீட்டின் போது நிதி முன்னேற்றம் மற்றும் தரப்படுத்தலைக் கருத்திற் கொண்டு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் முக்கியமாக மொத்த விரிவான வருமானம், மொத்த சொத்துக்கள் மற்றும் AA- கடன் தரப்படுத்தல் ஆகியவற்றின் காரணமாக ஒரு பலமான நிதி நிலையைக் காட்டுகின்றது.

### செயற்பாட்டு முன்னேற்றம்

2018 ஆம் ஆண்டில் அதன் அங்கத்தவர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளி அங்கத்துவ அட்டைகள் வழங்கப்பட்டது என்பதோடு, அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளி திட்டங்களை அரச சார்பு நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. ஊழியர்களுக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கும் நட்பு ரீதியான நிறுவனத்திற்கு சிறந்த பணிச் சூழலை உருவாக்கும் பொருட்டு தற்போதைய அலுவலக சூழலை ஒரு புதிய வளாகத்திற்கு மாற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டு அதன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டும் உள்ளது.

### மதிப்பீடு

எமது சிரேஷ்ட நிர்வாகத்தினால் 2018 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற வெற்றிக்கு வெளிக்காட்டிய தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் எமது ஊழியர்களின் எங்கள் வணிகத்தில் காட்டிய அர்ப்பணம் மற்றும் விசுவாசத்திற்காகவும் எனது நன்றி மற்றும் பாராட்டை தெரிவிக்க விரும்புகின்றேன். எங்களது உந்துசக்தியாக இருக்கும் பொது மக்களுக்கும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வாடிக்கையாளர்களுக்கும் அவர்கள் எம்மீது காட்டும் நம்பிக்கை மற்றும் நேர்மையான ஒத்துழைப்புக்கும் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும், 2018 ஆம் ஆண்டில் காட்டிய ஒத்துழைப்பிற்காக தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை, நிதிய அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஆகியோருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எதிர்வரும் காலங்களில் சமூகப் பாதுகாப்புக்கு மிகச் சிறந்த முறையில் பங்களிக்கும் வகையில் மக்களுக்கு சேவை செய்ய எதிர்பார்க்கின்றேன்.



மஞ்சுள ஹெட்டியாரச்சி

பிரதான நிறைவேற்று அதிகாரி (பதிற் கடமை)

18.02.2021



# முகாமைத்துவ கலந்துரையடலும் பகுப்பாய்வும்

# சுற்றுச்சூழல் மீளாய்வு

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், அதன் செயற்பாடுகள் முழு பொருளாதார இயக்கவியலிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை நன்றாக அறிந்து வைத்துள்ளது. இதற்குக் காரணம், இலங்கையின் சகல பொருளாதார முன்னேற்றங்களும் தோல்வியடையும் ஆபத்து காணப்படுவதனாலும், அதனை பெரும்பாலும் சமநிலைப்படுத்துவது, இலங்கையில் உள்ள காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திலிருந்தும் எடுக்கப்பட்ட காப்புறுதித் தொகையை பெறுவதன் மூலமாகும். அதன் விளைவாக, காப்புறுதி நிறுவனங்கள் தங்கள் அபாயத்தின் 30% இனை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடனும் எஞ்சிய பகுதியை வெளிநாட்டு மீள் காப்பீட்டாளர்களுடனும் இணைந்து மீள்காப்புறுதி செய்து மறுசீரமைப்புச் செய்வதன் மூலம் மாற்றிக் கொள்கின்றது. எனவே மூலோபாய முடிவுகளை எடுக்கும் போது நாட்டின் பொருளாார மற்றும் காப்புறுதித் துறையின் முன்னேற்றங்களை மறுஆய்வு செய்ய தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் கவனம் செலுத்த தவறவில்லை.

### இலங்கையின் பொருளாதாரம்

இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சி 2017 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க சாதகமற்ற நிலையைக் காட்டுகின்றது. உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி முன்னைய ஆண்டில் காணப்பட்ட 3.4 சதவீதத்தை விட 2018 ஆம் ஆண்டில் ஒப்பீட்டு ரீதியாக 3.2 சதவீதமாகக் காட்டுகின்றது. இந்த வளர்ச்சிக்கு பெரும்பாலும் உதவியது சேவை நடவடிக்கைகள் 4.7 சதவீதத்தில் விரிவாக்கம் பெறுதல் மற்றும் 4.8 சதவீதமான வளர்ச்சியை விவசாய நடவடிக்கைகள் பதிவு செய்துள்ளது. முக்கியமாக கட்டுமான நடவடிக்கைகள் குறைந்துள்ளதன் விளைவாக தொழில்துறை நடவடிக்கைகள் ஆண்டு முழுவதும் கணிசமாக 0.9 சதவீதமாகக் குறைந்து விட்டன. செலவு அணுகுமுறையின் படி, நுகர்வு மற்றும் முதலீட்டு செலவுகள் இரண்டுமே வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவீதமாக முதலீடு செய்து முன்னைய ஆண்டில் காணப்பட்ட 28.8 சதவீதத்திற்கு ஒப்பீடாக 2018 ஆம் ஆண்டில் 28.6 சதவீதமாகக் காணப்பட்டது. அத்தோடு சேமிப்பு - முதலீட்டு இடைவெளி இந்த ஆண்டில் விரிவடைந்தது. பற்றாக்குறையை நிரப்ப வெளிப்புற வளங்களை நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

### இலங்கையில் காப்புறுதித் தொழிற்துறை

2018 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்தில் வீழ்ச்சியைக் காட்டியுள்ளதால், காப்புறுதித் துறையும் GWP இன் வளர்ச்சி விகிதம் 2017 ஆம் ஆண்டில் 15.3% இலிருந்து 2018 ஆம் ஆண்டில் 10.03% ஆகக் குறைவடைவதைக் காணலாம். வருடத்தினுள் வெளியிடப்பட்ட மேலதிக கட்டுப்பணம் ரூபா. 16,546 மில்லியனாக இருந்ததோடு அது வருட இறுதியின் போது ரூபா. 181,506 மில்லியனாக அறிக்கையிடப்பட்டுள்ளது. வீழ்ச்சிக்குக் காரணம், ஆண்டு பூராகவும் நிலவிய பொருளாதார மற்றும் அரசியல்

ஸ்திரமற்ற தன்மைகளால் வணிக நம்பிக்கையில் ஏற்பட்ட தாக்கமாக இருக்கலாம். இது மிக தெளிவாக அறியப்படுவது பொதுக் காப்புறுதிப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி விகிதம் 2017 ஆம் ஆண்டில் 17.3% ஆக இருந்து 2018 ஆம் ஆண்டில் 8.3% ஆக குறைந்து வந்தமையாகும்.

# நிதி மீளாய்வு -2018

விசேட நிதி நிலைமைகளை பின்வருமாறு சுருக்கமாக காட்டலாம்.

**அட்டவணை : பிரதான நிதி நிலைமைகள்**

| | 2018 | 2017 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| எழுதப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் | 9,683,874,748 | 9,071,278,467 |
| தேறிய சம்பாதித்த கட்டுப்பணம் | 13,653,431,467 | 11,613,828,982 |
| வரிக்கு முன்னரான இலாபம் (PBT) | 3,288,839,528 | 1,077,185,612 |
| வரிக்குப் பின்னைய இலாபம் (PAT) | 3,183,238,866 | 976,233,935 |
| மொத்தச் சொத்துக்கள் | 15,595,192,598 | 18,552,675,429 |
| முதலீட்டின் மீதான நலன்கள;(%) | 20.4% | 5.2% |

**விளக்கப்படம் : நிதிச் சிறப்பம்சங்கள்**



2018 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ரூபா. 9.68 பில்லியன் எழுதப்பட்ட மொத்த கட்டுப்பணத்தை அறிக்கையிட்டுள்ளதுடன், அது 2017 ஆம் ஆண்டில் ரூபா. 9.07 பில்லியனாகக் காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா. 13.65 பில்லியன் தேறிய சம்பாதித்த கட்டுப்பணம் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 11.61 பில்லியன் வரை பதிவு செய்து 17.6% இனால் அதிகரிப்பைக் காட்டுகின்றது. இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது, வேலை நிறுத்தம், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத நிதியம் மற்றும் உள்ளக மீள்காப்புறுதி ஆகியவற்றிலிருந்து கட்டுப்பணம் கணிசமான அளவு அதிகரித்திருப்பதாகும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 12.50 பில்லியனை எழுதப்பட்ட தேறிய கட்டுப்பணம் 6.8% இனால் அதிகரித்து 2018 ஆம் ஆண்டு ரூபா. 13.35 பில்லியனை எட்டியுள்ளது.

2017 ஆம் ஆண்டில் ரூபா. 0.98 பில்லியன் வரிக்குப் பின்னைய இலாபம் 2018 ஆம் ஆண்டு ரூபா. 3.18 பில்லியனாக காணப்பட்டது. மீளாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் பிற வருமானங்கள் ரூபா. 1.46 ஆகக் காணப்பட்டதோடு அது 2017 ஆம் ஆண்டில் ரூபா. 1.15 பில்லியனாக அதிகரித்து இருந்தது. அதற்குக் காரணமாக அமைவது வட்டி வருமானத்தின் விளைவாக அதிகரித்த பணப்புழக்கம் அதிக வட்டி விகிதங்களுடன் முதலீட்டுக்கு மாற்றப்பட்டதாகும். இலங்கை ரூபாய்க்கு ஒப்பீட்டு ரீதியில் அமெரிக்க டொலர் அதிகரித்தல், நிதியாண்டு இறுதியில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அமெரிக்க டொலர் பெயரளவிலான சேமிப்புக் கணக்கின் மீது சம்பாதித்த பரிமாற்ற இலாபத்துக்கு ஒப்பீட்டு ரீதியில் நிதியத்துக்கு மிகவும் இலாபகரமாக இருந்தது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தை நிறுவுவதற்கு முன்னர் இலங்கை அரசின் விடயப்பரப்பின் கீழ் வேலை நிறுத்தம், கலவரம் , சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கை நிதியத்திலிருந்து மென் கடன் அளவில் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கடன்கள் உள்நாட்டுப் போரின் போது பங்கரவாத தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட பெரிய நிறுவனங்களுக்கு சலுகை விலையில் வழங்கப்பட்டன. 2006 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கு மாற்றப்பட்ட இந்த கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு ஏற்ப சம்பாதித்த வட்டி வருமானம் தற்சமயம் குறைந்துள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மொத்த சொத்துக்கள் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 18.55 பில்லியனாகக் காணப்பட்டதோடு, 2018 ஆம் ஆண்டில் ரூபா. 15.59 பில்லியனாக குறைவடைந்தது. அத்தோடு 2017 ஆம் ஆண்டில் ரூபா. 7.15 பில்லியன் ஆக இருந்த மொத்த பங்குகள் 2018 ஆம் ஆண்டில் 6.96 பில்லியனாக இருந்தது.

**வருமான மிளாய்வு**

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வருமானம் பின்வருமாறு எடுத்துக் காட்ட முடியும்.

**அட்டவணை : தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் காப்புறுதி தயாரிப்புக்கள் 2017 ஏள 2018**

| | 2017 | 2018 | வளர்ச்சி |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | |
| உள்ளக மீள்காப்புறுதி | **3,683,389,120** | **4,056,395,150** | **10.13%** |
| ளுசுஊஊ ரூ வுச ீசநஅரைஅ | **4,036,282,848** | **4,581,640,544** | **13.51%** |
| பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் | **417,885,956** | **422,117,039** | **1.01%** |
| பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் அல்லாத | **413,720,543** | **103,722,015** | **-74.93%** |
| தேசிய இயற்கை அனர்த்த கட்டுப்பணம் | **500,000,000** | **500,000,000** | **0.00%** |
| பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மருத்துவத் திட்டம் | **20,000,000** | **20,000,000** | **0.00%** |
| அக்ரஹாரவிற்கு பெறப்பட்ட பங்களிப்பு | **2,726,522,599** | **4,017,420,904** | **47.35%** |
| அறவிடப்பட்ட பயிர் காப்பீட்டு வரி | **1,878,361,459** | **2,138,167,676** | **13.83%** |

**விளக்கப்படம்:தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் காப்புறுதித் தயாரிப்புக்களின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் 2017 Vs 2018 (ரூபா.)**



# பிரிவு ரீதியான மீளாய்வு

## அக்ரஹார மருத்துவக் காப்புறுதித் திட்டம்

'அக்ரஹார' என்பது இலங்கையின் மிகப்பெரிய மருத்துவக் காப்புறுதித் திட்டமாகும். இது 845000 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.கிட்டத்தட்ட 2.3 மில்லியன் இலங்கையர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் இதன் மூலம் பாதுகாப்புக் கிடைக்கின்றது. இது ஒரு பங்களிப்புத் தொகை வழங்கும் திட்டமாகும். அங்கு ஓய்வூதியம் பெறக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்களினதும் சம்பளத்திலிருந்து பெயரளவு மாதாந்தம் அப்பங்களிப்புத் தொகை கழிக்கப்படுகின்றது.

2018 ஆம் நிதியாண்டில், அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கு திறைசேரியிடமிருந்து ரூபா. 750 மில்லியன் கிடைக்கப்பெற்றது என்பதோடு, அதன் உறுப்பினர் பங்களிப்பினால் ரூபா. 3.28 பில்லியன் அறவிடப்படுகின்றது. இந்த ஆண்டில் மருத்துவக் காப்புறுதித் திட்ட உரிமை கோரல்களில் மொத்தம் ரூபா. 4.1 பில்லியன் செலுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை : வருமான வகைகள்**

| | 2018 ரூபா. | 2017 ரூபா. |
|---|---|---|
| உறுப்பினர்களின் பங்களிப்பு | 2,979,518,379 | 2,154,586,499 |
| திறைசேரியின் பங்களிப்பு | 750,000,000 | 500,000,000 |
| அக்ரஹார காப்புறுதித் திட்டம் | 101,282,200 | 58,785,600 |
| அரச சார்புத் திட்டம் | 206,620,325 | 13,150,500 |
| மொத்தப் பங்களிப்பு | 4,037,420,000 | 2,726,522,599 |
| உரிமை கோரல் செலவு | 4,085,005,000 | 2,873,715,118 |
| பற்றாக்குறை/ மேலதிகமான | (47,585,000) | (147,192,519) |

**அட்டவணை:உரிமைகோரல் வகை**

| உரிமைகோரல் வகை | கிடைக்கப்பெற்ற உரிமைகோரல்கள் - 2018 | செலுத்தப்பட்ட உரிமைகோரல்கள் -2018 | வெளிப்படையான உரிமைகோரல்கள் - 2018 |
|---|---|---|---|
| இறப்பு | 2,755 | 2,607 | 61 |
| விபத்து | 202 | 151 | 27 |
| மகப்பேற்று | 17,986 | 17,143 | 759 |
| மூளை அறுவைச் சிகிச்சை | 29 | 29 | - |
| புற்றுநோய் | 1,439 | 1,335 | 18 |
| இருதய சத்திர சிகிச்சை | 1,074 | 1,060 | 2 |
| தனியார் மருத்துவமனை | 28,389 | 23,977 | 987 |

| | | | |
|---|---|---|---|
| இடுப்பை இணைத்தல் | 12 | 11 | - |
| சிறுநீரக சத்திர சிகிச்சை | 77 | 68 | - |
| முன்னங்கால் இணைத்தல் | 22 | 22 | - |
| செவிமடுத்தல் சாதனம் | 3 | 3 | - |
| பாரிசவாதம் | 8 | 8 | - |
| அரச மருத்துவமனை | 61,195 | 57,291 | 1,420 |
| மூக்குக் கண்ணாடி | 72,283 | 63,229 | 2,331 |
| **மொத்தம்** | **185,474** | 166,934 | **5,605** |

### அரச துறையினருக்கான அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளித் திட்டம்

2016 ஆம் ஆண்டில், அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளி காப்புறுதித் திட்டங்கள் அரச துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. தமது பங்களிப்பை ரூபா.300 ஆகவும் ரூபா. 600 ஆகவும் அதிகரித்துக் கொள்வதற்கு உடன்படும் பயனாளிகள் முறையே வெள்ளி மற்றும் தங்கத் திட்டத்தின் கீழமைந்த சலுகைகளுக்கு தகுதியுடையவர்களாவர்.

### அரச சார்பு துறையினருக்கான அக்ரஹார தங்கம் மற்றும் வெள்ளி காப்புறுதித் திட்டம்

2017 ஆம் ஆண்டில், அரச சார்பு துறையினருக்கான தங்கம் மற்றும் வெள்ளி காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டன.

### அக்ரஹார ஓய்வூதியத் திட்டம்

அக்ரஹார ஓய்வூதியத் திட்டம் 2016 ஆம் ஆண்டு மே மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதோடு இதன் தயாரிப்புக்கான வலுவான கேள்வி நிலவியதால் 2017 ஆம் ஆண்டில் அது மேலும் விரிவுபடுத்தப்பட்டது. இவ் ஓய்வூதியத் திட்டம் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியின் பின்னர் ஓய்வூதியம் பெறும் முழுமைக் காலத்துக்கு அரச ஊழியர்களுக்கு மாத்திரமே ஏற்புடையதாகின்றது.

### அக்ரஹார மின் அட்டைகள்

2012 ஆம் ஆண்டு சனவரி மாதம், அக்ரஹார பயனாளிகளுக்கு வழங்கும் சேவைகளை வினைத்திறன் வாய்ந்ததாக மேம்படுத்துவதற்கு சகல உறுப்பினர்களுக்கும் மின் அட்டைகளை வழங்கத் தொடங்கியது. 2017 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அக்ரஹாராவிற்கான தங்கம் மற்றும் வெள்ளி உறுப்பினர்களுக்கு மின் அட்டைகளை வழங்கத் தொடங்கியது. அக்ரஹார உறுப்பினர்களுக்கு நன்மைகளை வழங்குவது தொடர்பாக பல தனியார் மருத்துவமனைகளுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

## மீள்காப்புறுதி

2008 ஆம் ஆண்டில் மீள்காப்புறுதித் திட்டம் நிறுவப்பட்டது. அது 1528/20 இலக்கம் மற்றும் 2007 திசெம்பர் மாதம் 19 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இலங்கையில் உள்ள ஒவ்வொரு பொது காப்புறுதி நிறுவனத்திடமிருந்தும் காப்புறுதி செய்யப்பட்ட மீள்காப்புறுதித் தொகையின் 20% இனை பொறுப்பாக ஏற்றுள்ளது. இச்செயற்பாடு 2012 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. 2013 ஆம் ஆண்டில், இத்தொகை 30மூ வரை அதிகரிக்கப்பட்டு அது இன்று வரை தொடர்கின்றது.

2018 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் நிரல் அமைச்சுக்களின் உடன்பாட்டுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் ஐந்தொகையை பாதுகாப்பதற்காக மீள்காப்புறுதிப் பாதுகாப்பு (retrocession) பெற்றுக்கொள்ளப்பட்டதோடு, மீள்காப்புறுதிப் பாதுகாப்பின் எல்லை ரூபா. 7.5 பில்லியனாகும். மீள்காப்புறுதிச் சபையின் பிரதான மீள்காப்பீட்டாளராக சுநயெளைளயஉந சுந காணப்படுகின்றார்.

Retrocession பாதுகாப்புக்கு மேலதிகமாக, Renaissance சுந இன் தலைமையின் கீழ் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், ரூபா. 15 பில்லியன் வரை காப்புறுதி செய்யப்படாத சொத்துக்களை பாதுகாப்பதற்காக இயற்கை அனர்த்தக் காப்புறுதி மற்றும் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கான காப்புறுதி நிதியத்திற்காக ரூபா. 10 பில்லின் வரை அவர்களின் பற்றுக்களை பாதுகாப்பதற்கு மீள்காப்புறுதிப் பாதுகாப்பை பெற்றுக்கொண்டது. அவ்வாறே தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் AAIB இனால் விவசாய பயிர் காப்புறுதித் திட்டத்திற்கான மீள்காப்புறுதியொன்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

| மீள் காப்புறுதி | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் - உள்ளக மறுகாப்புறுதி | 4,056,395,150 | 3,683,389,120 |
| செலுத்தப்பட்ட மொத்தச் சலுகைகள் மற்றும் உரிமைகோரல்கள் | (2,345,202,622) | (2,039,286,678) |

## வேலைநிறுத்தம், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான காப்புறுதி நிதியம்

வேலைநிறுத்தம், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான காப்புறுதி நிதியம், 2008 மார்ச் மாம் 25 ஆந் திகதிய மற்றும் 1542/11 ஆம் இலக்கத்துடைய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இலங்கையின் காப்புறுதி நிறுவனங்களில் வேலைநிறுத்தங்கள், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கான காப்பீடு செய்துள்ளவர்களுக்கு வழங்கப்படும்.

2018 ஆம் ஆண்டில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் நிரல் அமைச்சுக்களின் ஒப்பந்தத்தில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இருப்புநிலைப் பத்திரத்தை பாதுகாக்க வேலைநிறுத்தம், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கை நிதியத்துக்கு மீள்காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றுள்ளது.

அத்தோடு மீள்கப்புறுதியின் எல்லை ரூபா. 10 பில்லியனாகும். மீள்காப்புறுதி சபையின் பிரதான மீள்காப்பீட்டாளராக ஆளுஃ. ஊாயரஉநச ளுலனெைஉயவந 1084 காணப்படுகின்றார்.

| SRCC and T நிதியம் | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் - - SRCCT நிதியம் | 4,581,640,544 | 4,036,282,848 |
| செலுத்தப்பட்ட மொத்தச் சலுகைகள் மற்றும் உரிமைகோரல்கள் | (50,085,704) | (12,314,131) |

## மோட்டார் வாகனக் காப்புறுதி

2008 ஆம் ஆண்டு முதல் அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பு நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் மோட்டார் வாகன காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரச சுற்றறிக்கை இலக்கம் PF 427 மற்றும் அதன் பின்னர் பிரசுரிக்கப்பட்ட PF 437 இற்கமைய, அரசுக்குச் சொந்தமான மோட்டார் மற்றும் மோட்டார் வாகன அல்லாத காப்புறுதியினை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் அல்லது அரசுக்குச் சொந்தமான காப்புறுதி நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தனது சேவையை தனியார் வாடிக்கையாளர்களுக்கும் விஸ்தரித்துள்ளது. மேலும் 2014 ஆம் ஆண்டு முதல் தனியார் வாடிக்கையாளர்களின் கட்டுப்பணப் பங்களிப்வு வெகுவாக அதிகரித்துள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் 2017 ஆம் ஆண்டு பகுதியளவு அரச சார்பு உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு புதிய காப்புறுதித் திட்டததை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் இது மோட்டார் காப்புறுதிப் பிரிவின் முக்கிய இலாபமீட்டும் பிரிவாகவும் காணப்படுகின்றது.

குறிப்பிடத்தக்க வகையில், செயற்பாடுகளை முறைமைப்படுத்தல் மற்றும் உரிமைகோரல்களை துரிதப்படுத்துவதற்காக தொடர்ச்சியான முயற்சியாக மாவட்ட செயலகங்களில் உள்ள கிளை அலுவலகங்களின் ஊடாக நாட்டின் எந்தவொரு இடத்திற்கும் சேவைப் பெறுநர்களின் தேவைகளுக்கு பதிலளிக்கும் வகையில் பேணிச் செல்லக்கூடிய தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 24 மணி பூராகவும் அழைப்பு நிலையமொன்றை நடாத்தி வருவது விசேடமாகும். நாடு முழுவதும் பரந்து காணப்படுகின்ற திறமையான மதிப்பீட்டாளர்க் குழுவின் செயற்பாட்டினை தொடர்ந்தும் முறைப்படுத்துவதற்கும் உரிமைகோரல்களை மேற்கொள்வதற்கும் வாடிக்கையாளர்களுக்கு விஸ்தீரணமான ஆதரவை வழங்குகின்றது.

| பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் | 2018 Rs. | 2017 Rs. |
|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் - மோட்டார் | 422,117,039 | 417,885,956 |
| செலுத்தப்பட்ட மொத்தச் சலுகைகள் மற்றும் உரிமைகோரல்கள் | (208,043,768) | (202,402,854) |

**அட்டவணை: மோட்டார் வாகன உரிமைகோரல் வகை**

| வகை | 2018 | | 2017 | | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உரிமை கோரல்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா. மிலலியன்) | உரிமை கோரல்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா. மிலலியன்) | உரிமை கோரல்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா. மிலலியன்) | உரிமை கோரல்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா. மிலலியன்) |
| தனியார் மோட்டார் வாகனம் | 657 | 56.05 | 587 | 61.38 | 327 | 40.24 | 258 | 33.02 |
| மோட்டார் சைக்கிள் | 2465 | 45.07 | 2176 | 35.8 | 1912 | 29.09 | 966 | 13.89 |
| மோட்டார் வாகனம் | 183 | 17.23 | 189 | 18.1 | 170 | 15.46 | 91 | 9.52 |
| லொரி | 131 | 9.99 | 116 | 11.28 | 69 | 3.3 | 51 | 4.34 |
| இரட்டை நோக்க வாகனம் | 558 | 52.65 | 514 | 56.21 | 391 | 42.06 | 220 | 26.51 |
| **மொத்தம்** | **3994** | **180.99** | **3582** | **182.77** | **2869** | **130.14** | **1இ586** | **87.27** |

## மோட்டார் வாகனம் அல்லாத காப்புறுதி

2009.08.20 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1615/20 கொண்ட வர்த்தமானி அறிவித்தலிற்கு ஏற்ப பொதுக் காப்புறுதி வர்த்தகம் (மோட்டார் வாகனம் அல்லாத) தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, அது பல வருட காலங்களாக படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பொதுக் காப்புறுதி வர்த்தகத்தில் பிரதானமாக தீ மற்றும் பொறியியல் காப்புறுதி, அறுவைச் சிகிச்சை காப்புறுதி, கடல் காப்புறுதி, மற்றும் ஏனைய இதர காப்புறுதிகள் என பிரிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் அட்டவணையில் 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கொள்கைகளின் எண்ணிக்கை மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் ஒவ்வொரு வகை வணிகத்தின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணப் பங்களிப்பைக் காட்டுகிறது.

**அட்டவணை:மோட்டார் வாகனம் அல்லாத காப்புறதியிலிருந்து வருமானத்தை வகைப்படுத்தல்**

| வகை | கொள்கைகளின் எண்ணிக்கை | மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் ( ரூபா. மில்லியன்) |
|---|---|---|
| தீ மற்றும் பொறியியல் காப்புறுதி | 84 | **23.6** |
| அறுவைச் சிகிச்சைக் காப்புறுதி | 07 | **36.3** |
| கடல் காப்புறுதி | 47 | **1.6** |
| ஏனைய இதரக் காப்புறுதிகள் | 142 | **41.7** |
| மொத்தம் | | **103** |

| **பொதுக் காப்புறுதி – மோட்டார் வாகனம் அல்லாத** | **2018**<br>**ரூபா.** | **2017**<br>**ரூபா.** |
|---|---|---|
| **மெ. எழு. கட்டுப்பணம் -மோட்டார் வாகனம் அல்லாத** | 103,722,015 | 413,720,543 |
| **மொத்த நலன்கள் மற்றும் உரிமைகோரல்கள் மருத்துவ மற்றும் பிற** | (469,755,602) | (151,205,332) |

## தேசிய இயற்கை அனர்த்தக் காப்புறுதித் திட்டம்

தேசிய இயற்கை அனர்த்தக் காப்புறுதித் திட்டம் (NNDIS) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமாக முன்மொழியப்பட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபையினால் (NITF) ஆரம்பிக்கப்பட்டது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு 2018 ஆம் ஆண்டில் மேற்படி காப்புறுதித் திட்டத்திற்காக ரூபா. 500 மில்லியன் கட்டுப்பணம் கிடைக்கப் பெற்றது. இக்காப்புறுதித் திட்டம் உயிர்கள் மற்றும் காப்புறுதி செய்யப்படாத சொத்துக்களுக்கு, விசேடமாக சகல வீடுகள் மற்றும் சிறு வர்த்தக நிலையங்களுக்கு காப்புறுதி வழங்குகின்றது. (வருடாந்த செலவு ரூபா. 10 மில்லியனை விஞ்சாத வர்த்தகங்களுக்காக சூறாவளி, புயல், வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவு, பூகம்பம், சுனாமி, பலத்த காற்றினால் மரங்கள் சரிந்து விழல், நிலையான சுவர்கள் இடிந்து விழுதல் மற்றும் வறட்சியைத் தவிர வேறு ஏதேனும் இயற்கை அபாயங்கள் மற்றும் வருடாந்தம் ரூபா. 10 பில்லியன் ஒட்டுமொத்த வரம்பு வரை நிதி வழங்கப்படுகின்றன. பாரிய வர்த்தங்களின் சொத்துச் சேதங்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களுடன் காப்புறுதி செய்துள்ளவர்கள் இதிலிருந்து விலக்கப்படுவார்கள்.

மீன்பிடித் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களுக்கும் மீன் பிடியில் ஈடுபடும் போது ஏற்படும் எதிர்பாராத மரணங்கள் தொடர்பில் தலா ரூபா. 1 மில்லியன் என்றவாறு பாதுகாப்பு வழங்கப்படும். இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட ஏனைய அனைவருக்கும் தனிப்பட்ட விபத்துக் காப்புறுதியின் கீழ் ரூபா. 100,000 தற்செயலான மரணப் பாதுகாப்புக்கு வழங்கப்படுகின்றது. நுண் காப்புறுதித் திணைக்களத்தினால் கையாளப்படும் தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டத்திற்காக மீள் காப்புறுதிப் பாதுகாப்பை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்படுகின்றது.

| இயற்கை அனர்த்தம் | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் - இயற்கை பேரழிவு | 500,000,000 | 500,000,000 |
| செலுத்தப்பட்ட மொத்த சலுகைகள் மற்றும் உரிமைகோரல்கள் | (843,784,556) | (4,699,472,888) |

## விவசாய கடன் பாதுகாப்பு காப்புறுதித் திட்டம் மற்றும் பயிர் காப்புறுதித் திட்டம்

பெரும்பாலான விவசாயிகள் வேளாண்மைக்காக கடன் வழங்கும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள். வறட்சி, வெள்ளப்பெருக்கு அல்லது யானைத் தாக்குதல்களால் பயிர்கள் சேதமடைந்தால், கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கடனில் குறிப்பிடத்தக்களவு தவணைக் கட்டணத்தைப் பெற முடியாமல் உள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் இக்காப்புறுதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



# ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு

# பெருநிறுவன ஆளுகை

## அறிமுகம்

பெருநிறுவன ஆளுகை என்பது நிறுவனத்தின் ஒட்டுமொத்த பொறுப்பும் ஒரு கட்டமைப்பின் கீழ் உருவாக்கப்படுகின்றது. நிறுவன நிர்வாகத்தின் இரண்டு பரிமாணங்கள் காணப்படுகின்றன. அவை இணக்கம் மற்றும் செயல்திறன் சமநிலையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

இணக்கப்பாடு "பெருநிறுவன ஆளுகை" என்றும் அழைக்கப்படுகிறது. அது சபையின் கட்டமைப்பு மற்றும் பாத்திரங்கள் மற்றும் நிறைவேற்று ஊதியம் போன்ற விடயங்களை உள்ளடக்கிக் காணப்படுகின்றது. நிறுவன ஆளுகை பல்வேறு முறைகேடுகளின் பின்னர் அண்மைய ஆண்டுகளில் அதற்காக குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்பட்டது. அத்தோடு, இத்துறையில் தொடர்ச்சியான முன்னேற்றங்களும் ஏற்படத் தொடங்கியது. இணக்கப்பாட்டினை கணக்காய்வினுள் உட்படுத்தப்படுவதன் மூலம் குறியீடுகள் மற்றும் / அல்லது தரநிலைகள் பொதுவாக இப்பரிமாணத்தை அடைந்துள்ளது. நல்லதொரு பெருநிறுவன ஆளுகைச் செயல்முறைகள் பயனுள்ளதாக இருப்பதை உறுதி செய்ய நன்கு நிறுவப்பட்ட மேற்பார்வைப் பொறிமுறையொன்று காணப்படுகின்றது. உதாரணமாக. கணக்காய்வுக் குழுக்கள். செயலாற்றுகைப் பரிமாணம், மூலோபாயம் மற்றும் பெறுமானங்களை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, பின்வரும் செயற்பாடுகளுக்காக சபை உதவியாக இருக்கின்றது: மூலோபாய முடிவுகளை வழங்குதல், ஆபத்து இடம்பெறுவதற்கான வாய்ப்பு மற்றும் செயல்திறனுக்கான அதன் முக்கிய இயக்கிகளை புரிந்து கொள்ளல், தீர்மானம் எடுப்பதற்கான அதன் முக்கிய கொள்கைகளை அடையாளம் காணல் என்பனவாகும்.

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் 2006 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதிலிருந்து, இலங்கையின் பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சிறந்த பிரயோகங்கள் குறித்து நிறுவன ஆளுகைச் சட்டக் கோவை மற்றும் நல்லாட்சி மற்றும் நிறுவன நிர்வாக நடைமுறைகளுக்கான அரச தொழில்முயற்சி வழிகாட்டல்களுக்குரிய துறைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி அதன் பெருநிறுவன ஆளகைக்கான நடைமுறை செயற்படுத்தப்பட்டுள்ளது.

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் சபை

2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சட்டத்திற்கமைய, நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்கள் ஏழு பேரைக் கொண்டு சபையினால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

(அ) நிதி விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்:

(ஆ) நிதி விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சின் பிரதம கணக்காளர்:

(இ) சுகாதார விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்:

(ஈ) அரசாங்க முகாமைத்துவ விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவா்: மற்றும்

(உ) அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்பட்ட நிதி வங்கியிடல், காப்புறுதி முகாமைத்துவம் அல்லது சட்டம் ஆகிய துறைகளில் தகுதி அல்லது நிபுணத்துவம் பெற்ற மூன்று நபர்கள் அமைச்சரால் பரிந்துரைக்கப்படுவார்கள்.

சபைக்கு ஒருவரை தலைவராக நியமனம் செய்வதற்கு அமைச்சருக்கு அதிகாரம் காணப்படுகின்றது. சட்டத்தின் படி, சபையின் சகல உறுப்பினர்களையும் நியமனம் செய்யப்பட்ட திகதி முதல் ஐந்து வருட காலத்திற்கு பதவியில் இருப்பார்கள். சபை உறுப்பினர்களின் பெயர்கள் சபை உறுப்பினர் சுயவிபரப் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. சபைக் கூட்டங்களுக்கு வருகை தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **சபை உறுப்பினர்கள்** | **2018 ஆம் ஆண்டில் சபை உறுப்பினர்களின் வரவு விபரம்** | | | | | | | | | | | | நியமனத் திகதி | விலகிய திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சன | பெப் | மார் | ஏப் | மே | ஜூன் | ஜூலை | ஆக | செப் | ஒக் | நவ | திசெ | | |
| திரு. மஞ்சுள டி சில்வா | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | ✓ | 06/04/2015 | - |
| திரு. ட்ரவேன் பெர்ணான்டோபுள்ளே | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | ✓ | 08/04/2015 | - |
| திரு. அசேந்தர சிறிவர்தன | Ab | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | Ab | | ✓ | | ✓ | 02/04/2015 | - |
| திரு. ஷந்தன குமாரசிங்க | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | ✓ | 14/12/2015 | - |
| திரு. ரோஹண டி சில்வா | ✓ | ✓ | ✓ | | ✓ | Ab | ✓ | ✓ | | ✓ | | ✓ | 05/05/2016 | - |
| திரு. என்.எம்.டி. நவரத்ன | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | ✓ | 31/07/2017 | - |
| திரு. ஏ.கே. சேனவிரத்ன | | Ab | Ab | | | | | | | | | | 22/02/2018 | 05/2018 |
| திரு. கே.ஏ. விமலேந்திர ராஜா | | | | | | | | ✓ | | Ab | | Ab | 29/08/2018 | |

**தகவல் வழங்கல்**

சபைக் கூட்டங்களுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர், அதற்கு முன்னர் நடைபெற்ற சபைக் கூட்டங்களின் மாதாந்த அறிக்கை, கூட்ட ஆவணங்கள் மற்றும் செயல்திறன் அறிக்கைகள் வழங்கப்படுகின்றன.

**நிதிக் கூற்றுக்கள்**

இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் மற்றும் ஏற்புடைய வேறு பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் நிபந்தனைகளைப் பின்பற்றி தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்துள்ளது. அவற்றின் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் செயலாற்றுகை தொடர்பான வெளிப்படுத்தல்கள் பகுப்பாய்வு செய்யப்படும்.

**வருடாந்த அறிக்கை**

நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை 2018 ஆம் ஆண்டின் முடிவுகளை எடுப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. அத்தோடு, 2018 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய நடவடிக்கைகள் தொடர்பாக ஒட்டுமொத்த பார்வையையும் விளக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பெறுகை நடவடிக்கை**

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பெறுகை நடவடிக்கை NPA வழிகாட்டுதலையும் அரச நிதித் திணைக்களத்தின் வழிகாட்டல்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. பெறுகை நடடிவடிக்கை இடம்பெறுவது பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ள CAPC (அமைச்சரவையினால் நியமிக்கப்பட் பெறுகைக் குழு), MPC (அமைச்சின் பெறுகைக் குழு), மற்றும் னுீஊ (திணைக்களப் பெறுகைக் குழு) இது போன்ற குழுக்களைப் பயன்படுத்தியாகும்.

**உள்ளகக் கட்டுப்பாடு**

2018 ஆம் ஆண்டினுள், தேசிய கணக்காய்வு திணைக்களத்தின் உள்ளக் கணப்பாய்வு மற்றும் வேலைநிறுத்தம், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத காப்புறுதி நிதியத்தின் கணக்காய்வு உள்ளிட்ட உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகள் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கணக்காய்வுக் குழு**

மீளாய்வு ஆண்டினுள் இலங்கையின் பட்டய கணக்காளர்களின் நிறுவத்தினால் வெளியிடப்பட்ட 'கணக்காய்வுக் குழுக்களுக்கான சிறந்த நடைமுறைக் குறியீடு' இற்கு ஏற்ப கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் வகுக்கப்பட்டு கணக்காய்வுக் குழு நிறுவப்பட்டுள்ளது. கணக்காய்வின் விடயப் பரப்பினைப் போன்றே கணக்காய்வுக் குழுவுடன் இணைந்துள்ள பொறுப்புக்களும் 2018 ஆம் ஆணடில் பின்வருமாறு நிறுவப்பட்டுள்ளன.

- ✓ வருடாந்த கணக்காய்வுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.
- ✓ உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மீளாய்வு செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.
- ✓ செலவுப் பயனுறுதியின் இரட்டை நோக்கத்திற்காகவும், வீணான செலவீனங்களை குறைப்பதற்காகவும் தனித்தனி அலகுகளின் கீழ் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.
- ✓ கணக்காய்வாளர் தலைமை அதிபதியன் முகாமைத்துவக் கடிதங்கள் தொடர்பாக வெளிவாரி கணக்காய்வாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தொடர்ந்தும் பின்தொடர்தல்.
- ✓ சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்கி நடப்பதை உறுதி செய்வதல்.
- ✓ குறித்த கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஏற்புடையாக இருக்கின்றமை தொடர்பில் உறுதிப்படுத்துவதற்காக நிதிக் கூற்றைப் பரீட்சித்தல்.
- ✓ குறைபாடுகள் மற்றும் தீர்வு நடவடிக்கைகளுக்காக வெளிவாரி மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளைப் போன்றே முகாமைத்துவக் கடிதங்களுகம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.
- ✓ குழுப் பரிந்துரைகள் மற்றம் கட்டளைகள் அமுல்படுத்தப்படுவது குறித்து மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டினுள் உள்ளக கட்டுப்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மாதாந்தம் தயாரிக்கப்படுவதோடு, பின்தொடர் நடவடிக்கைக் கூட்டங்களும் நடாத்தப்படுகின்றன. அடையாளங் காணப்பட்ட ஆபத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, பலவீனங்களைக் கட்டுப்படுத்தவும், நிர்வாகத்தின் வினைத்திறன் மற்றும் பயனுறுதித் தன்மையை மேம்படுத்திக் கொள்வதற்கு

கட்டுப்பாடுகள் மற்றம் சாத்தியமான வழிமுறைகளை விருத்தி செய்யும் விதம் குறித்தும் தீர்மானிக்கப்படுகின்றன. மற்றொரு நடவடிக்கையாக, உள்ளக கணக்காய்வுக் குழு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படடு குறித்த நிறுவன நடவடிக்கைகள் இடம்பெறுகின்றதா என்பதை கண்காணிப்பதற்கு காப்புறுதி நிறுவனங்கள் சிலவற்றுக்கு களப் பயணங்களை மேற்கொள்ளல். 2018 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் குழுக் குழுமம் இவ்வாறு அமைந்துள்ளது.

| **கணக்காய்வுக் குழு உறுப்பினர்கள்** | |
|---|---|
| திரு. கே. ஏ. விமலேந்திராஜா (தலைவர்) | |
| திரு. ட்ரேவீன் பிரனாந்துபிள்ளை | |
| திரு. அசேந்திர சிரிவர்தன | |

**வெளிவாரிக் கணக்காய்வு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி வெளிவாரி கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதோடு, எந்தவொரு எழுதப்பட்ட சட்டத்தின் கீழும் அரசாங்கத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரச கூட்டுத்தாபனங்கள், வர்த்தகங்கள் அல்லது அரசாங்கத்தில் உள்ள பிற நிறுவனங்களின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட வேண்டியுள்ளது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகளின் வருடாந்த கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**முதலீட்டுக் குழு**

முதலீட்டுக் குழுவின் பொறுப்புக்களை பிரதானமாக இரு பிரிவுகளாக வகுக்கலாம். அதாவது ஒரு சிறந்த முதலீட்டுக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் முதலீட்டுக் கொள்கையின் தேர்வளவுகள் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப அதிகபட்ச நன்மைகளை வழங்குவதற்காக அதனை வினைத்திறன் வாய்ந்ததாக நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதாகும். மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டினுள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் இலாகாவை முகாமை செய்தல், சொத்து ஒதுக்கீடு மற்றும் சொத்து – பொறுப்புபோட்டி முகாமைத்துவம் என்பன ஆராயப்பட்டு முதலீட்டுக்கான புதிய வாய்ப்புக்களைத் தேடுகின்றன.

# 2018 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்



**திரு. மஞ்சுள டி சில்வா**
**(தலைவர்)**



**திரு. அசேந்தர சிறிவர்தன**
**(சபை உறுப்பினர்)**



**திரு. ரோஹண டீ சில்வா**
**(சபை உறுப்பினர்)**



**திரு. கே.ஏ. விமலேந்திரராஜா**
**(சபை உறுப்பினர்)**



**திரு. ஷந்தன குமாரசிங்க**
**(சபைஉறுப்பினர்)**



**திரு. ட்ரவேன் பெர்ணான்டோபுள்ளே**
**(சபை உறுப்பினர்)**

# பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் விபரம்

### திரு. மஞ்சுள டி சில்வா ( தலைவர்)

மஞ்சுள டி சில்வா 06.04.2015 ஆம் திகதி தலைவராக நியமிக்கப்பட்டார். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு தலைவராக நியமிப்பதற்கு முன்னர், அவர் எச்எண்பி அசூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக பணியாற்றினார். திரு. மஞ்சுள டி சில்வா பொருளியலில் கௌரவ கலைமாணி (முதலாம் வகுப்பு) பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றிருப்பதுடன், ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள லண்டன் வணிகப் பாடசாலையில் வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் இவர் FCMA (UK) மற்றும் CGMA ஆகிய தகைமைகளையும் கொண்டுள்ளார்.

இவர் அண்மையில் அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். 2015ம் ஆண்டுக்கு முன்னர்9 ஆண்டுகளாக எச்எண்பி அசூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் 2 வருடங்களுக்கு மேலாக பிரதம நிறைவேற்று அலுவலராகவும் பணியாற்றினார். அத்துடன் இவர் ஈகள் என்டிபி பண்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடட் நிறுவனத்தில் (தற்போது என்டிபி வெல்த் மனேஜ்மன்ட்) பொது முகாமையாளராகவும், ஈகள் இன்சூரன்ஸ் கோப்பரேசன் லிமிடட் (தற்போது AIA இன்சூரன்ஸ்) நிறுவனத்தின் கூட்டிணைந்த விரிசைகள் மற்றும் மனித வளங்களுக்கான பொது முகாமையாளராகவும், அரச தொழில் முயற்சிகள் மீளமைப்பு ஆணைக்குழுவின் (PERC) பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றினார். 2016 ஆம் ஆண்டில் CIMA (சார்ட்டர்ட் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட் அக்கவுண்டன்ட்ஸ்) இலங்கைச் சபையின் தலைவராகவும் பணியாற்றினார். பின்னர் ஆநுளுயுயே பிராந்தியத்திற்கான அதன் பிராந்திய சபையிலும் பணியாற்றினார்.

### திரு. ரோஹண டீ சில்வா ( சபை உறுப்பினர்)

திரு. ரோஹண டீ சில்வா 2016.05.05 ஆம் திகதியன்று சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு மே மாதம் முதல் சபைக் கூட்டங்களுக்குச் சமூகமளித்தார். மீளாய்வாண்டில், சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகப் பணியாற்றினார்.

### திரு. அசேந்திர சிரிவர்தன ( சபை உறுப்பினர்)

திரு. அசேந்திர சிரிவர்தன அவர்கள் 02.04.2015 ஆந் திகதி சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவர் 2018 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்ற வழக்கறிஞராகவும் செயற்பட்டு வருகின்றார்.

### திரு. ஷந்தன குமாரசிங்க ( சபை உறுப்பினர்)

திரு ஷந்தன குமாரசிங்க அவர்கள் பணிப்பாளர் சபை உறுப்பினராக 14.12.2015ம் திகதி நியமிக்கப்பட்டார். இவர் 2017 ஆம் ஆண்டில் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சில் பணிப்பாளராகப் பணியாற்றினார்.

**திரு. ட்ரவேன் பெர்ணான்டோபுள்ளே***(சபை உறுப்பினர்)*

திரு. ட்ரவேன் பெர்னாண்டோபுள்ளே அவர்கள் 08.05.2015 ஆந் திகதி பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து முதலாவது சபைக் கூட்டங்களிலும் கலந்து கொண்டார். அவர் HSBC இல் இருந்து ஓய்வு பெற்றபோது ர்ளுடீஊ இன் துணை தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்துள்ளார்.

**திரு. என்.எம்.டீ. நவரத்ன** *(சபை உறுப்பினர்)*

திரு. என்.எம்.டீ. நவரத்ன அவர்கள் 2017 ஆம் ஆண்டு முதல் பணிப்பாளர் சபை உறுதிப்பினராக நியமிக்கப்பட்டார். 2018 ஆம் ஆண்டில் அவர் நிதி அமைச்சில் தலைமை கணக்காளராக பணியாற்றினார்.

**திரு. கே.ஏ. விமலேந்திரராஜா** *(சபை உறுப்பினர்)*

திரு. கே.ஏ. விமலேந்திரராஜா அவர்கள் 2018.08.29 ஆந் திகதி பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். திரு. கே.ஏ. விமலேந்திரராஜா அவர்கள் அரச சேவையில் 24 வருடத்துக்கும் மேற்பட்ட அனுபவம் வாய்ந்த இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தராவார். இக்காலத்தினுள் அவர் நிதிக் கொள்கைத் திணைக்களததின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றினார். அவர் வழக்கறிஞராகவும் செயற்பட்டார்.

# பெருநிறுவன மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



01

**திரு. சனத் சீ டி சில்வா** – பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்



02

**திரு. ஜே.ஏ.டீ. சிறிவர்தன** – உதவிப் பொது முகாமையாளர் - நிதி



03

**செல்வி. நிமாலி பதிரன** – உதவிப் பொது முகாமையாளர் - காப்புறுதி



04

**திரு. லசந்த யூ குமார** – தலைவர் மனித வள மற்றும் நிர்வாகத் திணைக்களம்



05

**செல்வி. நிமாலி பெரேரா** – தலைவர் கிளை மேற்பார்வைத் திணைக்களம்



06

**செல்வி. தம்மிகா வீரகோன்** - தலைவர் நிதிப் பிரிவு



07

**திரு. ஆர்.எஸ் குணசேகர** – தலைவர் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுத் திணைக்களம்



08

**திரு. கவிந்த ஜயசிங்க** – தலைவர் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம்



09

**செல்வி. உபேக்ஷா ஏகநாயக்க** – தலைவர் மோட்டார் எழுத்தாக்கத் திணைக்களம்



10

**திரு. அநுர சமரகோன்** - தலைவர் அக்ரஹார திணைக்களம்



11

**செல்வி. தேஷானீ நாணயக்கார** – தலைவர் மீள்காப்புறுதி மற்றும் எஸ்ஆர்சீசீ திணைக்களம்



12

**செல்வி. ரந்திமா டீ.எம்.மனகே** – தலைவர் பொதுக் கோரிக்கைகள் திணைக்களம்




**செல்வி. நிமேஷா சஹபந்து** – தலைவர் நுண்காப்புறுதித் திணைக்களம்




**திரு. டீ.ஜீ. லக்ஷ்மன்** - தலைவர் மோட்டார் கோரிக்கைகள் திணைக்களம்




**திரு. சிதாரா அசங்க ஜயலத்** - தலைவர் நிர்வாகப் பிரிவு




**செல்வி. காயத்திரி சொய்ஸா** – தலைவர் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம்




**திரு. நாமல் காஞ்சன** – தலைவர் நிர்வாகப் பிரிவு




**செல்வி. எஸ்ஆர்.ஜீ. உதாரி பிரியபாஷினீ** – தலைவர் சட்டத் திணைக்களம்




**செல்வி. கயனி சியம்பலாகொட** – நிறைவேற்றுச் செயலாளர்




**திரு. ஷாமல் சுமுது சேனரத்ன** – தலைவர் அநுராதபுரக் கிளை




**திரு. எம்.என்.கே. பண்டிகமகே** – தலைவர் ஹம்பாந்தோட்டைக் கிளை




**திரு. சிசித ஷந்தரகுமார** – தலைவர் கணக்கு அறிக்கைப் பிரிவு

# நிறுவன இடர் முகாமைத்துவம்

## அறிமுகம்

நிறுவன இடர் முகாமைத்துவம் (நுசுஆ) என்பது நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, முகமைத்துவம், மற்றும் ஏனைய பதவியணியினரால் நடைமுறைப்படுத்தப்படும், மூலோபாயங்களைத் தயாரிக்கும் போதும் மற்றும் நிறுவனங்கள் பூராகவும் செயற்படுத்தப்படும், அந்நிறுவனங்களைப் பாதிக்கக்கூடிய சாத்தியமான நிகழ்வுகளை அடையாளம் காணவும் மற்றும் இடர்களை முகாமை செய்வதற்கு மற்றும் நிறுவனஞ்சார் நோக்கங்களை அடைவது குறித்தும் நியாயமான உத்தரவாதத்தை அளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டதொரு செயற்பாடாக பொருள் கோட முடியும்.

தேசிய காப்புறுதி நிம்பிக்கை நிதியத்தினால் பின்பற்றப்படும் நிறுவன இடர் முகாமைத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளில் உள்ளடங்குவது:

- வர்த்தக மூலோபாயத்தின் பின்னணியைக் கருத்திற் கொள்ளல்
- அது உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை அனைவரினதும் பொறுப்பாகும்.
- சபையினால் வழிநடாத்தப்படும் இலக்கு நோக்கிய மூலோபாயமாகும்
- இடரை முனைப்புடன் முகாமைத்துவம் செய்தல்
- இடர் தொடர்பாக விழிப்புணர்வுடன் கூடிய கலாசாரமொன்றை உருவாக்குதல்
- இடர் முகாமைத்துவத்திற்கான விரிவானதும் முழுமையானதுமான ஓர் அணுகுமுறை
- பரந்த அளவிலான அபாயங்களை கருத்திற் கொள்ளல் (மூலோபாய, நிதி, செயற்பாட்டு மற்றும் இணக்கம்)
- இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் வடிவமைப்பு மூலம் செயற்படுத்தல்.

இடர் முகாமைத்துவம் என்பது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மூலோபாய நிர்வாகததின் ஒரு மையப் பகுதியாகும். ஒவ்வொரு செயற்பாட்டிலும் மற்றும் அனைத்து நடவடிக்கைகளின் ஊடாக பேண்தகு நலன்களை அடைந்து கொள்ளும் நோக்கத்துடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் இடர் முகாமைத்துவச் செயற்பாட்டில் அவர்களின் செயற்பாடுகளுக்குள்ள அபாயம் குறித்து முறையாக நடவடிக்கை எடுக்கின்றது. இடர்களை கண்டறிதல் மற்றும் அவற்றினைக் குறைப்பதற்கு முக்கியமாக அமைவது சிறந்த இடர் முகாமைத்துவம் என்பதனை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அடையாளம் கண்டுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நோக்கமாக அமைவது நிறுவனத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சகல காரணிகளையும் சிறந்தது எது தீயது எது என புரிந்து கொண்டு அவ்வனைத்து செயற்பாடுகளுக்கும் அதிகபட்ச நிலையான பெறுமானத்தைச் சேர்ப்பதாகும். நிறுவன இடர் முகாமைத்துவ உத்திகளைக் கடைபிடிக்கும் போது, தாக்கம் / விளைவுகளின் அளவு மற்றும் நிகழ்வின் சாத்தியக்கூறு / நம்பகத்தன்மை ஆகியவற்றை மதிப்பிடுவதில் பின்வரும் முக்கிய அபாயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**R01 - மூலோபாய இடர்**

மூலோபாய இடர் என்பது உள்ளக மற்றும் வெளிவாரி சுற்றுச்சூழல் காரணிகளால் எதிர்பார்த்த பிரகாரம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மூலோபாய குறிக்கோள்கள், நோக்கங்கள் மற்றும் வர்த்தக திட்டங்களை அடைய முடியாதுள்ள ஆபத்துக்களைக் குறிக்கின்றது. மூலோபாய நோக்கங்களை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துவதற்காக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவம் பொதுவான சூழலில் அரசியல், தொழில்நுட்பம், சமூக-கலாச்சார, பொருளாதார வளர்ச்சிகள் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மூலோபாய நோக்கத்தை அடைவதில் தாக்கம் செலுத்தக்கூடிய காப்புறுதித் துறைக்கு இலங்கை தொடர்பான பணிச்சூழலில் போட்டியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் இயக்கவியல் ஆகியவற்றை விழிப்புடன் கண்காணித்து வருகின்றது.

**R02 - வணிக இடர்**

வணிக இடர் என்பது பல்வேறு வணிக நடவடிக்கைகளை நிறுத்தும் அல்லது குறைக்கின்ற ஆபத்தைக் குறிக்கின்றது. மீள்காப்புறுதி, வேலைநிறுத்தம், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதக் காப்புறுதி, மோட்டார் வாகனக் காப்புறுதி, அக்ரஹாரக் காப்புறுதி, இயற்கைப் பேரழிவுக் காப்புறுதி மற்றும் பல மூலோபாய வணிக பிரிவுகளாக பன்முகப்படுத்தப்படுவதன் மூலம் வணிக ஆபத்து குறைக்கப்படுகின்றது.

**R03 - பணப்புழக்க இடர்**

பணப்புழக்க ஆபத்து அல்லது நிதி அமைச்சிடம் கோரப்படும் போது உரிமைகோரல் கொடுப்பனவுகள், மீள்காப்புறுதிக் கொடுப்பனவுகள் மற்றும் திறைசேரிக்கான நிதிப் பரிமாற்றம் போன்ற ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்ற இயலாமல் போவதாகும். ரெப்போக்கள், வெவ்வேறு முதிர்வுகளின் திறைசேரி உண்டியல்கள் மற்றும் கடன் பத்திரங்கள் போன்ற பல்வேறு முதிர்வுகளுடன் முதலீடுகளை பல்வகைப்படுத்துவதன் மூலம் இந்த ஆபத்து குறைக்கப்பட்டுள்ளது.

**R04 - செயற்பாட்டு இடர்**

செயல்பாடுகளின் கணினிமயமாக்கல் மற்றும் உள்ளக கணக்காய்வு ஆகியவற்றால் செயற்பாட்டு ஆபத்தைக் குறைக்கலாம். கட்டுப்பணத்தை அறவிடல் மற்றும் உரிமைகோரல் கொடுப்பனவுகளின் பிழைகள் மற்றும் முரண்பாடுகளைக் குறைப்பதற்காக வேலைநிறுத்தம், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத காப்புறுதி நிதியம் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பிற துறைகளின் உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகள் உள்ளக கணக்காய்வுத் துறையினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், பிழைகள் மற்றும் முரண்பாடுகளைக் குறைப்பதற்காக அலுவலக செயற்பாடுகள் அனைத்தும் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன.

**R05 - சர்வதேச இடர்**

சர்வதேச அரசியல் மற்றும் சமூக - பொருளாதார இயக்கவியல் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. இது தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய வணிகத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் மீள்காப்புறுதி தொடர்பான சர்வதேச வணிகப் போக்குகளை குறிப்பாக கண்காணித்து வருவதன் காரணமாக இந்த அபாயங்களை நிர்வகித்து வருகின்றது.

**R06 - இயற்கை இடர்**

மழை, வெள்ளம், சூறாவளிகள் மற்றும் பூச்சிகளின் தாக்குதல்கள் மற்றும் பயிர்க் காப்புறுதி, பொதுக் காப்புறுதி மற்றும் மோட்டார் வாகனக் காப்புறுதி என்பனவற்றைப் பாதிக்கும் பூச்சிகளின் தாக்குதல்கள் போன்ற இயற்கை போரழிவுகளால் ஏற்படும் ஆபாயத்தை இது குறிக்கின்றது. வானிலை முன்னறிவிப்புக்களை விழிப்புடன் கண்காணிப்பதன் மூலமும் அதற்கேற்ப கட்டுப்பணத்தை கட்டுப்படுத்துவதன் மூலமும் இந்த ஆபத்தை குறைக்கலாம். இது NNDIS மற்றும் பயிர்க் காப்புறுதி போன்ற தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் காப்புறுதித் திட்டங்களை பாதிக்கின்றது.

**R07 - செறிவு இடர்**

செறிவு ஆபத்து என்பது ஒரு நிறுவனத்தின் நிலுவையில் உள்ள நிதி இருப்புக்களின் எண்ணிக்கை அல்லது பல்வேறு கடனாளிகள் அல்லது நிதியாளர்களின் ஒட்டுமொத்த பரவலாகும். முதன்மையாக ஆபத்து இல்லாத அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலமும், பல பிராந்திய வங்கிகள் மூலம் அரசாங்கப் பத்திரங்களை மாத்திரம் கையாள்வதன் மூலமும் செறிவு ஆபத்து குறைக்கப்படுகின்றது.

**R09 - நற்பெயருக்கான இடர்**

அதன் வியாபாரப் பெயர், மதிப்புகள் மற்றும் ஒருமைப்பாடு எல்லா நேரத்திலும் பாதுகாக்கப்படுவதையும் மேம்படுத்தப்படுவதையும் உறுதி செய்யும் வகையில் சந்தை நற்பெயரை நிர்வகிக்க வேண்டியதன் அவசியத்தை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அங்கீகரிக்கின்றது. கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படுவதை உறுதிசெய்ய வலுவான கட்டுப்பாடு மற்றும் இணக்க வழிமுறைகள் இருப்பதால், அனைத்து முயற்சிகளும் சிறந்த நிறுவன மதிப்புகளுடன் நேர்மறையான பணிக் கலாச்சாரத்தை உருவாக்கி வலுப்படுத்தப்படுவதை நோக்க இயக்கப்படுகின்றன.

**R10 - மோசடி இடர்**

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஒரு பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறை மற்றும் கணக்கியல் முறையை நிறுவியுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ஒரு பயனுள்ள உள்ளக கணக்காய்வுச் செயற்பாட்டைக் கொண்டுள்ளது என்பதுடன், இது மோசடி நடவடிக்கைகளின் போது ஏற்படும் ஆபத்துக்கள் தடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக நிறுவனத்திற்குள் உள்ள அனைத்து உள்ளக கட்டுப்பாடுகளையும் தொடர்ந்து மதிப்பாய்வு செய்கிறது. தெளிவான தகவல் தொடர்பு வலையமைப்புடன் சேர்ந்து நன்கு கட்டமைக்கப்பட்ட செயற்பாட்டு செயல்முறைகள் மற்றும் செயல்முறை ஆரம்ப எச்சரிக்கை சமிக்ஞைகளையும் தெளிவாக வெளிப்படுத்தப்படுவதை உறுதி செய்கின்றது.

**R11 - அந்நிய செலாவணி இடர்**

அந்நியச் செலாவணி பரிவர்த்தனை அபாயங்களை அகற்றுவதற்காக, மீள்காப்புறுதி கட்டுப்பணத்தை செலுத்துவதற்காக உள்ளூர் நாணய மதிப்புகளில் மீள்காப்புறுதி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

**R12 - மீள்காப்புறுதி இடர்**

2018 ஆம் ஆண்டில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் மீள்காப்புறுதி இலாகாவை சிறந்த நிதி மதிப்பீடுகள் மற்றும் உயர் உலகளாலிய தரவரிசை கொண்ட மீள்காப்புறுதியாளர்களுடன் ஈடுசெய்ய நியாயமான விலையில் மீள்காப்புறுதி அட்டைகளைப் பெற்றுள்ளது. 2018 ஆம் ஆண்டில், வேலைநிறுத்தம் , கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத காப்புறுதி நிதியம், மறுசீரமைப்புத் திட்டம், தேசிய விவசாய காப்புறுதித் திட்டம் மற்றும் தேசிய இயற்கை பேரிடர் காப்புறுதித் திட்டத்திற்கான மீள்காப்புறுதி அட்டைகள் பெறப்படுகின்றது.

# நிலைத்தன்மையை அறிக்கையிடல்

நிலையான வளர்ச்சியின் குறிக்கோளை நோக்கி நிறுவன செயல்திறனுக்காக உள்ளக மற்றும் வெளிவாரி பங்குதாரர்களுக்கு அளவிடுதல், வெளிப்படுத்தல் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் நடைமுறைதான் நிலைத்தன்மை அறிக்கையாகும். சமூக, சுற்றுச்சூழல், கலாச்சார மற்றும் பொருளாதார செயல்திறன் மற்றும் அதன் தாக்கம் பற்றி ஒரு நிறுவனத்திற்கு தகவல்களை வழங்குவதையும், அதேபோல் ஒரு அறிக்கையிடல் அமைப்பின் செயல்திறனை மேம்படுத்த எடுக்கப்பட்ட முன்முயற்சிகளையும் நிலைத்தன்மை அறிக்கையிடல் நோக்கமாகக் கொண்டுள்ளது. அவர்களின் தேசிய நிலைபேற்றுத்தன்மைக்குள்ள அச்சுறுத்தல்கள் தொடர்பில் அரசாங்கத்தின் ஆர்வம் அதிகமாக காணப்படுகின்றது. இதன் விளைவாக அரசாங்க ஒழுங்குமுறை அபிலாசைகள் மற்றும் அவர்களின் சுய நிலைத்தன்மை, புதுமை மற்றும் செலவுக் குறைப்புக்கான வாய்ப்புக்கள் ஆகியவற்றின் அச்சுறுத்தல்கள் காரணமாக, நிறுவனங்கள் பெருகிய முறையில் அக்கறையின் சொல்லாட்சியை நீடித்த தன்மையுடன் ஏற்றுக்கொள்கின்றன.

காப்புறுதித் துறை 2018 ஆம் ஆண்டுக்கு நகர்ந்ததால் வணிகங்களின் பெருநிறுவன நிலைத்தன்மை ஒரு கவலைக்கிடமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, பொருளாதார செழிப்பு, சுற்றுச்சூழல் மற்றும் சமூக தரம் ஆகிய மூன்று அடிமட்டப் புதிய செயலாற்றுகை பரிமாணங்களை அடைந்து கொள்வதன் மூலம் தனது வணிக செயற்பாட்டை மேம்படுத்துவதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் முயற்சித்து வருவதுடன் ”சிறந்த பொறுப்புள்ள நிறுவன குடிமகனாக” இருப்பதற்கும் முனைகின்றது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் கணிசமான அளவு வரி விதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் அதன் மூலம் அரசாங்கத்தின் திரட்டிய நிதிக்கு அதன் பங்களிப்பாக 2018 ஆம் ஆண்டில் ரூபா. 2,750 மில்லியனை வழங்கியுள்ளது. இதன் கடந்த கால பங்களிப்பை கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையின் மூலம் கண்டுகொள்ளலாம்.

**அட்டவணை: திரட்டிய நிதியத்திற்கான பங்களிப்பு**

| வருடம் | தொகை ரூபா. |
|---|---|
| 2018 | 2,750,000,000 |
| 2017 | 1,500,000,000 |
| 2016 | 3,200,000,000 |
| 2015 | 3,000,000,000 |
| 2014 | 4,000,000,000 |
| 2013 | 3,200,000,000 |

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், அக்ரஹார சுகாதார காப்புறுதித் திட்டத்தின் கீழ் சகல அரச துறை ஊழியர்களுக்கும் சுகாதார சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்காக நன்கு பிரசித்தி பெற்றுள்ள

வைத்தியசாலைகளுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் பல புரிந்துணர்வு ஒப்பநதங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

வாங்குரோத்து நிலை மற்றும் கடன் அபாயத்தை குறைத்தல் மற்றும் தேசிய காப்புறதி நம்பிக்கை நிதியத்தின் வணிகச் சின்னத்தை மேம்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தொடர்ந்தும் அதன் பிட்ச் பெறுமானத்தை AA- ஆக இற்றைப்படுத்தி வருகின்றது .

# பணிப்பாளர்களின் அறிக்கை

நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட்ட பின்வரும் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையினால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

(அ) நிதி விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்:

(ஆ) நிதி விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சின் பிரதம கணக்காளர்:

(இ) சுகாதார விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்:

(ஈ) அரசாங்க முகாமைத்துவ விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவா்: மற்றும்

(உ) அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்பட்ட நிதி வங்கியிடல், காப்புறுதி முகாமைத்துவம் அல்லது சட்டம் ஆகிய துறைகளில் தகுதி அல்லது நிபுணத்துவம் பெற்ற மூன்று நபர்கள் அமைச்சரால் பரிந்துரைக்கப்படுவார்கள்.

சபையிலிருந்து தலைவர் ஒருவரை நியமனம் செய்வதற்கு அமைச்சருக்கு அதிகாரம் காணப்படுகின்றது. சட்டத்தின் படி, சபையின் சகல உறுப்பினர்களையும் நியமனம் செய்யப்பட்ட திகதி முதல் ஐந்து வருட காலத்திற்கு பதவியில் இருப்பார்கள். 2018 ஆம் ஆண்டில், ஒன்பது (09) சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன அத்தோடு, சபை உறுப்பினர்கள் சிறப்பாக கூட்டங்களுக்கு வருகை தந்து சிறந்த பதிவினை மேற்கொண்டுள்ளார்கள். சபைக் கூட்டங்களுக்கு உறுப்பினர்களின் வருகை பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

| சபை உறுப்பினர்கள் | 2018 ஆம் ஆண்டில் சபை உறுப்பினர்களின் வரவு விபரம் | | | | | | | | | | | | நியமனத் திகதி | விலகிய திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சன | பெப் | மார் | ஏப் | மே | ஜுன் | ஜுலை | ஆக | செப் | ஒக் | நவ | திசெ | | |
| திரு. மஞ்சுள டி சில்வா | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | ✓ | 06/04/2015 | - |
| திரு. ட்ரவேன் பெர்ணான்டோபுள்ளே | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | ✓ | 08/04/2015 | - |
| திரு. அசேந்தர சிறிவர்தன | Ab | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | Ab | | ✓ | | ✓ | 02/04/2015 | - |
| திரு. ஷந்தன குமாரசிங்க | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | ✓ | 14/12/2015 | - |
| திரு. ரோஹண டீ சில்வா | ✓ | ✓ | ✓ | | ✓ | Ab | ✓ | ✓ | | ✓ | | ✓ | 05/05/2016 | - |
| திரு. என்.எம்.டீ. நவரத்ன | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | ✓ | 31/07/2017 | - |
| திரு. ஏ.கே. சேனவிரத்ன | | Ab | Ab | | | | | | | | | | 22/02/2018 | 05/2018 |
| திரு. கே.ஏ. விமலேந்திர ராஜா | | | | | | | | ✓ | | Ab | | Ab | 29/08/2018 | |

அங்கீகரிக்கப்பட்ட வணிகத் திட்டம் மற்றும் நிறுவனத்தின் நிதி மற்றும் பௌதீக இலக்குகளின் அடிப்படையில் வணிகம் பொருத்தமான முறையில் நடாத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக சபை நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**பிரதான செயற்பாடுகள் மற்றும் வணிக மீளாய்வுகள்**

2018 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பிரதான செயற்பாடுகளாக, அரச ஊழியர்களுக்கான மருத்துவ காப்புறுதித் திட்டம் (அக்ரஹார), கட்டாய மீள்காப்புறுதி திட்டம், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதித் திட்டம், மோட்டார் வாகனக் காப்புறுதித் திட்டம், பொதுக் காப்புறுதித் திட்டம், தேசிய இயற்கை அனர்த்தக் காப்புறுதித் திட்டம், விவசாயக் கடன் பாதுகாப்புத் திட்டம் மற்றும் வேலை

நிறுத்தம், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத நிதியம் (ளுசுஊஊருவுகு) என்பன நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**நிதியியல் பெறுபேறுகள்**

2018 ஆம் ஆண்டில், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மொத்த எழுத்துப்பூர்வ கட்டுப்பணம் ரூபா. 9,684 மில்லியனாகும். முக்கியமாக மீள்காப்புறுதி மற்றும் வேலை நிறுத்தம், கலவரம், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாத காப்புறுதி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கட்டுப்பணம் அதிகரித்த காரணத்தினால், மொத்த எழுத்துப்பூர்வ கட்டுப்பணம் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 9,071 மில்லியனாகும். இதனை 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஓரளவு அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் ரூபா. 3,183 மில்லியனை வரிக்குப் பின்னரான இலாபமாக ஈட்டிக்கொண்டது.

**ஊழியர்கள்**

2018.12.31 ஆந் திகதிக்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பணியாட்தொகுதியினரின் பலம் 238 ஆக இருந்தது.

**கணக்காய்வாளர்கள்**

1971 ஆம் ஆண்டு இலக்கம் 38 இனையுடைய நிதிச் சட்டத்திற்கமைய, 2018 ஆம் ஆண்டின் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் நிதி அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.

**கணக்காய்வுக் குழு**

2018 ஆம் ஆண்டு கணக்காய்வுக் குழு நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்கள் மூன்று பேரைக் கொண்டமைந்தது அவர்கள் திரு. கே.ஏ. விமலேந்திரராஜா அவர்கள் ( தலைவர்) – ( பணிப்பாளர் நாயகம் - பிஸ்கால் கொள்கைத் திணைக்களம் - 2018), திரு. டி.ஆர். பிரனாந்துபுள்ளே அவர்கள் மற்றும் திரு அசேந்திர சிரிவர்தன அவர்கள் ஆகியோராவர்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அத்தியட்சகர் இக்குழுவின் அழைப்பின் பேரில் மேற்பார்வையாளராக கூட்டங்களில் கலந்து கொண்டார். செயற்குழுக் கூட்ட நடவடிக்கைகள் போதுமானளவு தகவல்களுடன் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, அவை பணிப்பாளர் சபைக்கு தவறாமல் தெரிவிக்கப்பட்டும் உள்ளது.

உள்ளக கணக்காய்வுத் திட்டம் கணக்காய்வுக் குழவினால் முன்வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டினுள், அனைத்து பிரிவுகளினதும் உள்ளக கணக்காய்வு மற்றும் வேலைநிறுத்தம், கலவரம்,சிவில் போராட்டங்கள் மற்றும் பயங்கரவாத காப்புறுதி நிதியமும் கணக்காய்வினுள் உள்ளடக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வுகள் கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பெருநிறுவன ஆளுகை**

இலங்கையின் பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சிறந்த பிரயோகங்கள் குறித்து நிறுவன ஆளுகைச் சட்டக் கோவை மற்றும் நல்லாட்சி மற்றும் நிறுவன நிர்வாக நடைமுறைகளுக்கான அரச தொழில்முயற்சி வழிகாட்டல்களுக்குரிய துறைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி அதன் பெருநிறுவன ஆளுகை நடைமுறை செயற்படுத்தப்பட்டுள்ளது.

மவாஹிப் மவ்ஜூத்
தலைவர்

காயத்ரி சொய்சா
பணிப்பாளர் சபைச் செயலாளர் (பதிற் கடமை)

2021 ஒக்டோபர் மாதம் 03 ஆந் திகதி
கொழும்பு.



# நிதி அறிக்கைகள்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் பணிகள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது

நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும்,

தொடா்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடா்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடா்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடா்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடா்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடா்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமத்துடனான இணங்காமைகள்**

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | LKAS 07 காசுப்பாய்ச்சல் கூற்று நியமத்தின் 20 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப்பாய்ச்சல், விரிவான வருமானக்கூற்றினுள் வெளிப்படுத்தப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்கள் மற்றும் இருப்புகளின் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் பெற்றுக்கொள்ள வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதிகளின் காலப்பகுதியில் இடம்பெற்ற வேறுபாட்டினை காண்பித்து சமர்ப்பிக்க முடியும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சலினை தீர்மானிக்கும் போது வரிக்கு முன்னரான இலாபத்திற்காக விரிவான வருமானக் கூற்றிற்காக சீராக்கம் செய்யப்படாத ரூபா 627,653,598 கூட்டுத்தொதகையான உருப்படிகள் 02 இற்காக சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இது நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது ஏற்பட்ட வழுவொன்றாகும். இதனால் நிதி பெறுபேற்றிற்கு அல்லது நிதி நிலைமைக்கு எவ்வித தாக்கமும் இடம்பெற்றிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு ஆகும்.<br><br>**Net fair value changes – Rs. 399,633,151**<br><br>இந்த உருப்படிகள் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சலினுள் சீராக்கம் செய்யாது முதலீட்டிலான தேறிய காசுப்பாய்ச்சலினுள் சீராக்கம் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பபோம்.<br><br>**Prior year adjustment – Rs. 228,020,447**<br><br>இந்த உருப்படிகள் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சலினுள் வரிக்கு முன்னரான இலாபத்திற்கு சீராக்கம் மேற்கொள்ளாது செயற்பாட்டு சொத்துக்கள் அல்லது செயற்பாட்டு பொறுப்புகளிலிருந்தான மாற்றமாக சீராக்கம் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். | நியமத்தின் பிரகாரம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | LKAS 16 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் நியமத்தின 40 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்மதிப்பீட்டின் பெறுபேறாக சொத்தொன்றின் கொண்டு செல்லும் பெறுமதி குறைவடையும் போது அந்த செலவினம் செலவொன்றாக இனங்காணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், நிதியத்தின் 2018 ஆம் ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டின் பிரகாரம் சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி ரூபா 2,102,126 இனால் குறைவடைந்தமை முன்னைய ஆண்டுகளில் மீள்மதிப்பீட்டு மிகையொன்று இல்லாதிருந்தமை நிதியத்தின் இலாபத்தினை மதிப்பீடு செய்யும் போது | 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டின் போது மீள்மதிப்பீட்டு இலாபம் ஏற்பட்டது. இந்த வாகனம் 2018/08/06 ஆந் திகதி விற்பனை செய்யும் போது குறித்த மீள்மதிப்பீட்டு வருமானத்தினை கணக்கு வைப்பதற்கும், ஏனைய சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் போது ஏற்பட்ட நட்டம் விரிவான வருமானத்தின் சீராக்கமொன்றாக ஆகிய இரண்டு விடயங்களில் உருவாகும் தேறிய பெறுமதிகள் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது. |

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | செலவினமொன்றாக இனங்காணப்படாது ஏனைய வருமானங்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | LKAS 01 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் நியமத்தின் 114 ஆம் பந்தியின் (இ) பிரகாரம் பயன்படுத்துவோருக்கு நிதிக்கூற்றுக்களை புரிந்துகொள்ள மற்றும் அவற்றை ஏனைய நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பீடு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் நிதி நிலமைக்கூற்றில், விரிவான வருமானக்கூற்றில், மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கான துணை தகவல்களும் ஒவ்வொரு கூற்று மற்றும் வரிசை உருப்படி சமர்ப்பிக்கப்பட்டுள்ள கிரமத்தில் பதிவுகளின் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறே, LKAS 12 வருமான வரி நியமத்தின் பிரகாரம் வருமான வரி கணிப்பீடு தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், நிதியம் வருமான வரி பொறுப்புகள் பதிவொன்றின் மூலம் நிதிக்கூற்றுக்களினுள் வெளிப்படுத்தப்பட்டிருக்காத காரணத்தால் அந்த தேவைப்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டமையை உறுதி செய்ய முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் LKAS 12 வருமான வரி நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நியமத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது. |

## 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டினுள் விவசாய மற்றும் பண்ணைக் காப்புறுதிச் சபைக்கு நட்டஈடு செலுத்துவதற்காக ரூபா 1,813,322,777 தொகை கிடைத்திருந்ததுடன், அதற்காக நிதியத்தினால் நட்டஈடு செலுத்துவதற்காக ஒதுக்கீட்டு கணக்கொன்று மற்றும் பயிர்ச்செய்கை காப்புறுதி நட்டஈட்டுக்காக பொறுப்புகளிலான மாற்றங்கள் கணக்கொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். இந்த இரண்டு | 2018 திசெம்பர் மாதத்தின் போது மேலதிக நட்டஈடு செலுத்தும் தேவைப்பாடு தொடர்பில் AAIB நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கங்கள் மாற்றமின்றி பேணிச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான தகவல்களின் அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளிலும் நவம்பர் மாதம் மாத்திரம் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், திசெம்பர் மாதத்திற்காக ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபைக்கு திசெம்பர் 14 மற்றும் 26 ஆந் திகதிகளில் செலுத்தப்பட்டிருந்த நவம்பர் மாதத்திற்குரிய ரூபா 62,761,857 கூட்டுத்தொகை பயிர்ச்செய்கை நட்டஈட்டுக்கான ஒதுக்கங்கள் கணக்கில் இறுதிக் கணக்கு மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | மறுகாப்புறுதி பிரிவின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெற வேண்டிய தவணை வருமானத்தினுள் 03 நிறுவனங்களுக்குரிய ரூபா 20,444,071 தொகையான செலவு மீதியொன்று காணப்பட்டதுடன், அதற்குரிய மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறானதொரு செலவு மீதியொன்று ஏற்படுவதற்கு பெற வேண்டிய தவணை வருமானத்தினை விட அதிகமான அளவினால் காப்புறுதி நட்டஈட்டுக்காக அவர்களுக்காக அறவிடப்பட வேண்டியமையால் ஆகும். மீதிகளை இணக்கம் செய்வதற்கு மற்றும் அதற்கமைய நெயறற்படுவதற்கு 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்ச்சியான இணக்கம் செய்தல் மேற்கொள்ளப்பட்டு கணக்குகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியமை. |
| (iii) | காப்புறுதிக் கம்பனிகளால் பணி புறக்கணிப்புகள், கலவரங்கள் மற்றும் மக்கள் போராட்டங்கள் மற்றும் தீவிரவாத (SRCC & TR) நிதியத்தின காப்புறுதி தவணைகளை அறவிடுவதற்கு உரியதாக (நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம்) கம்பனியொன்றின் தவணையின் கணக்காய்வின போது நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த மற்றும் உள்ளபடியாக செலுத்த வேண்டிய தவணைப் பணம் ஆகியவற்றுக்கிடையே ரூபா 8,490,385 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | SRCC & TR காப்புறுதி தவணைகளை அறவிடுவதற்காக மிகவும் கிரமமான நடைமுறையொன்று காணப்படுவதுடன், வருடாந்தம் வெளியிடப்படும் Limits & Rates for SRCC & TR பதிவேட்டில் தவணைகள் செலுத்தப்பட வேண்டிய விதம் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. உள்ளக கணக்காய்வின் மூலமும் நடைமுறையொன்று மிகவும் செயற்திறனாகவும் சரியாகவும் மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்படுவதுடன், அந்த அவதானிப்புகளும் தவணைகளை சேகரிக்கும் போது பின்பற்றப்படும் மற்றுமொரு நடைமுறையாகும். | உரிய நடைமுறையின் அடிப்படையில் தவணைகள் அறவிடல் இடம்பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மறு காப்புறுதிப் பிரிவிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தவணை வருமானத்திற்குரிய பேரேட்டுக் கணக்குகளின் மீதிகள் மற்றும் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு ஆகியவற்றுக்கிடையே ரூபா 9,072,974 ஆன வேறுபாடொன்று நிலவியது. | பெற வேண்டிய மறு காப்புறுதி தவணையின் பேரேட்டு மீதி மற்றும் கால பகுப்பாய்வு ஆகியவற்றுக்கிடையே குறிப்பிடப்பட்டுள்ள வேறுபாட்டுக்கான காரணங்கள் பின்வருமாறு ஆகும்.<br><br>(அ) AAI இந்த மீதி 2012 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டு வரப்படும் மீதியாகும். அத்துடன், பெரும்பாலும் செலுத் வேண்டிய நட்டஈடு கோரிக்கைகள் மற்றும் தவணைகளை பெற்றுக்கொள்வதன் மூலம் தீர்க்கப்படுவது செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் பெற வேண்டிய மீதி ஆகியவற்றை ஈடு செய்வதன் மூலம் ஆகும். இந்த மீதியை பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>(ஆ) AAI மற்றும் MBSL கம்பனிகளுக்கு மீள செலுத் வேண்டிய தொகை ரூபா 2,101,338.06 தொகையானது 2019 பெப்ரவரி மாதம் திருத்தப்பட்டிருந்தது.<br><br>(இ) இனங்காணப்படாத மீதிகளாக ரூபா 19,610.19 தொகையான இந்த மீதியும் நீண்ட காலமாக நிலவும் மீதியாவதுடன், பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | தொடர்ச்சியான இணக்கம் செய்தல் மேற்கொள்ளப்பட்டு கணக்குகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மாவட்ட செயலகங்களின் நாளாந்தம் பண வைப்பு திகதிகள் மற்றும் கட்டமைப்பின் பற்றுச்சீட்டுகள் | இந்த குறைபாடுகளை குறைப்பதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், | சரியான வருமானம் கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | வெளியிடப்பட்டுள்ள திகதிகள் ஆகியவற்றுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய அளவிலான கால இடைவெளி காணப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டிற்குரிய வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 2,502,302 பெறுமதி 2019 ஆம் ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் தவிர்க்கப்படும். | |
| (உ) | நிதியம் மற்றும் மறு காப்புறுதி நிறுவனம் ஆகியவற்றுக்கிடையே 2018.03.31 ஆந் திகதி முதல் 2019.03.31 ஆந் திகதி வரையிலும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட மறு காப்புறுதி உடன்படிக்கைகளின் பிரகாரம், ரூபா 98,670,792 தொகையான வருடாந்த தவணையொன்று செலுத்தப்படுவதுடன், அதில் கலாண்டொன்றின் தவணை பெறுமதி ரூபா 24,667,698 ஆன போதிலும்,ஈட்டப்படாத தவணைகளாக ரூபா 24,329,784 தொகை ஒதுக்கப்பட்டமையின் காரணத்தால் ஈட்டப்படாத தவணை பயிர்ச்செய்கை மறு காப்புறுதி கணக்கு மற்றும் ஈட்டப்படாத காப்புறுதி ஒதுக்கப் கணக்கினுள் ரூபா 337,914 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இதனை கணிப்பீடு செய்யும் அடிப்படையில் ஏற்பட்ட வழுவாகும். ஈட்டப்படாத தவணை வருமானங்களை கணக்கு வைக்கும் போது 365 நாள் அடிப்படை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், இவ்வாறான குறைபாடுகளை குறைப்பதற்காக எதீர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | சரியான தகவல்களின் அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மறு காப்புறுதி கம்பனியொன்றினால் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட நேரடியான மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையொன்று இல்லாதிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதியத்தின் நிதிக்கூற்றக்களில் ரூபா 147,376,867 தொகை அந்த நிறுவனத்திடமிருந்து பெற வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் கூற்று | எமது கணக்கு புத்தகங்களின் பிரகாரம் SIB நிறுவனத்திடமிருந்து 2016 ஆம் ஆண்டின போது ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அறவிடப்பட வேண்டிய மறு காப்புறுதி நட்டஈட்டு தொகை ரூபா 1,147,376,867 ஆகும். அந்த தொகை குறித்த மறுகாப்புறுதி நிறுவனத்தினால் SIB நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் வெளிநாட்டு மறு காப்புறுதியாளரால் சான்றுபடுத்தப்பட்டுள்ளது. அதனால் அந்த மீதி சரியானது என உறுதிப்படுத்துகின்றோம். SIB நிறுவனம் தொடர்நதும் ரூபா 19,993,473 ஆன தொகை எமது நிறுவனத்திற்கு செலுத்த | சரியான தகவல்களின் அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகியவற்றுக்கிடையே ரூபா 147,376,867 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | வேண்டியுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். | |
| (எ) | அவ்வாறே அந்த மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்குரியதாக பெற வேண்டிய மீதி ரூபா 309,562,948 ஆகும். எவ்வாறெனினும், நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டியதாக அவ்வாறானதொரு தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் ஆகியவற்றுக்கிடையே ரூபா 309,562,948 ஆன வேறுபாடொன்று நிலவியது. | 2018.12.31 ஆந் திகதி வரையிலும் ரூபா 309,562,948 ஆன தொகை செலுத்த வேண்டியதாக எமது கணக்கு புத்தகங்களின் பிரகாரம் காணப்படவில்லை என்பதை குறிப்பிடுகின்றேன். | சரியாக இணக்கம் செய்யப்பட்டு உரிய முறையில் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டியமை. |
| (ஏ) | நிதிக்கூற்றுக்களில் நிதியத்தின் முதலீட்டு வருமானமாக மொத்த வருமானம் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், தேறிய வருமானம் கணக்குகளினுள் உள்ளடக்கபபட்டிருந்தது. அதற்குரியதாக ஆண்டின் இறுதியில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமையால் முதலீட்டு வருமானம் ரூபா 128,781,294 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சரியான தகவல்களின் அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 33,593,020 தொகையான இடர் கடன் மீதி கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 34,364,395 ஆனமையால் ரூபா 771,375 ஆன வேறுபாடொன்று நிலவியது. | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளுக்கிடையே முன்னைய ஆண்டு முதல் நிலவி வரும் வேறுபாடொன்று காணப்படுவதுடன், அதனை எதிர்வரும் காலங்களில தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சரியான சீராக்கங்களை மேற்கொண்டு சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியமை. |
| (ஓ) | ஏனைய நிதியல்லாத சொத்துக்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 773,506 தொகையான விழா முற்பண மீதி கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 616,702 ஆனமையால் நிதிக்கூற்றுக்கள் மற்றும் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிகளுக்கிடையே நெடுங்காலமாக மீதியொன்று நிலவுவதுடன், அதனை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். | சரயான இணக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். |

பட்டோலைகளுக்கிடையே ரூபா 156,804 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காயவு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (i) | மறு காப்புறுதி நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ள வேண்டிய தொகை | 1,321,391,889 | நேர் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | தாங்களால் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் உரிய தரப்பினரிடமிருந்து மீதி உறுதிப்படுத்தல்களை அழைப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நேர் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் முன்வைக்கப்பட வேண்டும். |
| (ii) | பெற வேண்டிய பணம் - மறு காப்புறுதி | 9,053,364 | விரிவான பட்டோலைகள் | 2012 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்பிருந்து முன் கொண்டு வரப்படுகின்ற மீதிகளாவதுடன், எந்தவொரு ஆவணமும் அல்லது சான்றும் இல்லாதிருந்தமையால் பதிவளிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு பத்திரமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய முறையில் நிலமை கையாளப்படல் வேண்டும். |
| (iii) | திணைக்களங்களுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்கள் - இடர் கடன் மீதி | 3,462,112 | தீர்க்கப்பட்டமைக்கான சான்றுகள் | 2012 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்பிருந்து முன் கொண்டு வரப்படுகின்ற மீதிகளாவதுடன், எந்தவொரு ஆவணமும் அல்லது சான்றும் இல்லாதிருந்தமையால் கணக்காய்விற்கு முன்வைக்க முடியாதிருந்தது. பதிவளிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு பத்திரமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. | உரிய முறையில் நிலமை கையாளப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அதன் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (iv) | Cheque Return – Car ACC Motor | 585,481 | மூல ஆவணங்கள் | 2012 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்பிருந்து முன் கொண்டு வரப்படுகின்ற மீதிகளாவதுடன், எந்தவொரு ஆவணமும் அல்லது சான்றும் இல்லாதிருந்தமையால் கணக்காய்விற்கு முன்வைக்க முடியாதிருந்தது. பதிவளிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு பத்திரமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய முறையில் நிலமை கையாளப்படல் வேண்டும். |
| (v) | செலுத்த வேண்டிய வைப்புகள் | 270,049 | விரிவான தகவல்கள் | 2012 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்பிருந்து முன் கொண்டு வரப்படுகின்ற மீதிகளாவதுடன், எந்தவொரு ஆவணமும் அல்லது சான்றும் இல்லாதிருந்தமையால் கணக்காய்விற்கு முன்வைக்க முடியாதிருந்தது. பதிவளிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு பத்திரமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய முறையில் நிலமை கையாளப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 07/2015 ஆம் இலக்க அரச | விழா முற்பணங்களாக வழங்கக்கூடிய ஆகக்கூடிய | நிறுவனத்தின் ஆரம்பம் முதல் விழா முற்பணமாக | சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிர்வாக சுற்றறிக்கை | தொகை ரூபா 10,000 ஆன போதிலும் நிதியத்தினால் அந்த எல்லையினை கருத்தில் கொள்ளாது பதவியணியின் அடிப்படை சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு 117 ஊழியர்களுக்கு அந்த எல்லையினை விஞ்சி ரூபா 3,229,139 தொகை முறையான செலுத்தப்பட்டிருந்தது. | மாதாந்தம் அடிப்படை சம்பளம் வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போதும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் விழா முற்பணம் வழங்குதல் இடம்பெற்றுள்ளது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் 371 | பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த கட்டுநிதிகள் அது வழங்கப்பட்ட பணி நிறைவடைந்ததுடன் உடனடியாக மீள தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த 448,000 தொகையான 13 உப கட்டுநிதிகளை தீர்ப்பதற்காக 01 மாதங்கள் முதல் 4½ மாதங்கள் வரையான காலம் கடந்திருந்தது. | பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த கட்டுநிதிகள் அது வழங்கப்பட்ட பணி நிறைவடைந்ததுடன் உடனடியாக மீள தீர்க்கப்பட வேண்டிய போதிலும், பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த கட்டுநிதிகள் 13 இனை தீர்த்தல் தாமதமாகியுள்ளதுடன், எதிர்காலத்தில் தாமதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 396 | 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 60,752,249 ஆக இருந்ததுடன், இது 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 53,891,837 இனால், அதாவது 786 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தது. அதில் உள்ளடங்கியுள்ள 2017 ஆம் ஆண்டின் போது தேசிய இடர் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரியதாக வெளியிடப்பட்ட எனினும் சமர்ப்பிக்கப்படாத பெறுமதி ரூபா 57,436,510 ஆகும். அது காசோலை வழங்கப்பட்ட திகதியிலிருந்து | NNDIS காசோலைகளுக்கான செல்லுபடியான காலம் நிறைவடைந்து சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை மீள செல்லுபடியாக்குவதற்காக துரிதமாக எமக்கு அனுப்புமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் அவர்கள் தற்போது அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தவாறு உள்ளனர். மேலும் காலத்தனை நீடிப்பு செய்வதற்காக நிறுவனத்திற்கு அனுப்பப்படும் காசோலைகள் காலம் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒரு வருடத்தினை கடந்திருந்தது. | நீடிப்பு செய்யப்பட்டு துரிதமாக பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும், அவை காப்புறுதியாளர்களுக்கு கிடைத்திருக்காமையால் இந்த கணக்கு மீதி அதிகரித்திருந்தது. | |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 139 மற்றும் 187 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்காக காசோலைகள் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது கொடுப்பனவு மேற்கொள்ளும் உத்தியோகத்தரால் வங்கி மீதியின் அனைத்து கொடுப்பனவுகளையும் தீர்ப்பனவு செய்வதற்காக போதியளவில் உள்ளமை சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு வங்கி மீதி தொடர்பில் கருத்திற் கொள்ளாது காசோலைகள் வழங்கப்பட்டமையால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வழங்கிய போதிலும் கொடுப்பனவிற்காக முன்வைக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 9,837,431 ஆக இருந்ததுடன், அத் திகதியில் உள்ளபடியான வங்கி மீதி ரூபா 6,224,696 ஆகும். அந்த காசோலைகள் அத் திகதியில் தீர்க்கப்பட்டிருக்கும் எனின் ரூபா 3,612,734 ஆன வங்கி மேலதிகப்பற்று ஏற்பட்டிருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | இலங்கை வங்கியின் 82727165 இலக்கமுடைய நடைமுறைக் கணக்கின் 2018 திசெம்கர் 31 ஆந் திகதியில உள்ளபடியான காசுப் புத்தகத்தின் பிரகாரமான வங்கி மீதி மற்றும் வங்கி கணக்கு மீதிகளுக்கிடையே வேறுபாடொன்று காணப்படுகின்றது. இது காசுப் புத்தகத்தின் பிராகாரம் பாதகமான மீதியொன்றான போதிலும், உள்ளபடியான வங்கி மீதி சாதகமான மீதியொன்றாகும். இது பெயரளவிலான வங்கி மேலதிகப்பற்று ஆகும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அச்சுறுத்தலினை குறைத்துக்கொள்ள வேண்டும். |
| (உ) | 2008 மார்ச் 25 ஆந் திகதிய 1542/11 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி | பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களுக்கு மாத்திரம் வேலை நிறுத்தங்கள், கலவரங்கள், மக்கள் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் தீவிரவாத நிதியம் தொடர்பில் (SRCC) விசேட கணக்கிலுள்ள பணத்தினை பயன்படுத்த | ளுசுஊஊ நிதிய நட்டஈடு செலுத்தல் மறு காப்புறுதி தவணைகளை செலுத்துவதற்காக ஊழியர் சம்பளம் மற்றும் படிகள் நிர்வாக செலவினங்களின் பராமரிப்பு மற்றும் ஏனைய | அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் அதிவுரைகளுக்கமைய செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | விசேட வர்த்தமானியின் 04 ஆம் பந்தி | முடியுமான போதிலும், அவ்வாறு செயற்படாது 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது அதற்கு உரித்தற்ற செலவினங்களுக்காக ரூபா 69,708,220 கூட்டுத்தொகையான பணம் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செலவினங்கள் மற்றும் கட்டிட வாடகை போன்றவற்றுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளமை யை சுட்டிக் காண்பிக்கின்றேன். |
| (ஊ) | NNDIS உரித்து விண்ணப்பங்களை சமர்ப்பித்தலின் மதியுரை கோவை. | இயற்கையான அனர்த்தங்களுக்கு எதிராக காப்பீட்டினை பெற்றுக்கொடுப்பதற்காக நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய இடர்கள் காப்பீட்டு உத்தேச முறைமைக்கு உரிய வழிகாட்டியின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படாத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான விண்ணப்பங்களில் கையொப்பம் அல்லது முத்திரை பொறிக்கப்பட்டிராத போதிலும், அந்த விண்ணப்பங்களின் தொகுதியை பரிசோதனை செய்த போது முத்திரை அல்லது கையொப்பம் இடப்பட்டுள்ள விண்ணப்பங்களின் அவை ஒத்திருந்த காரணத்தால், அந்த காலப்பகுதியில் பெரும் எண்ணிக்கையான விண்ணப்பங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| (i) | குறித்த உரித்து விண்ணப்பங்களுக்காக பிரதேச செயலாளரின் கையொப்பம் மற்றும் இரப்பர் முத்திரையின்றி சமர்ப்பித்தல். | கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் மற்றும் அதனை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் இரப்பர் முத்திரை மற்றும் கையொப்பம் மாத்திரம் ஒப்பிடப்பட்டு அதன் பின்னர் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | உரிய வழிகாட்டலின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ii) | ரூபா 500,000 இனை விஞ்சும் உரித்து விண்ணப்பங்கள் தொடர்பிலான அபாயம் பொறியியலாளர் ஒருவரால் மதிப்பிடப்படல் அவசியமான போதிலும், நிதியத்தினால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்காமை. | ரூபா 500,000.00 இனை விஞ்சும் உரித்து விண்ணப்பங்கள் தொடர்பில் உரிய வீடுகள் குழுவொன்றினால் மதிப்பிடப்படுவதுடன், இது வரையிலும் உயர் பெறுமதியிலான விண்ணப்பங்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் அபாய பொறியியலாளர் ஒருவர் அதற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. | வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | உரித்து விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்டு | விபத்திற்குள்ளாகிய ஆதனங்களுக்குரிய உரித்தினை | வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கும் போது உரிய உரித்தாளி தொடர்பில் போதியளவான பதிவேடுகள் முன்வைக்கப்படாமை. | உறுதிப்படுத்தும் போது உரித்துறுதிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது வீட்டு குழு உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களை கருத்திற்கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், புகைப்படங்களை பெற்றுக்கொள்ள முடியாத சில் விண்ணப்பங்களுக்காக குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனினும், தற்போது அனைத்து கொடுப்பனவுகளையும் மேற்கொள்வதற்கு முன்னர் அனைத்து ஆவணங்களும் போதியளவில் பரிசோதிக்கப்படுகின்றது. | |
| (iv) | இயற்கை அனர்த்த காப்புறுதி முறைமையின் கீழ் தற்காலிக இருப்பிடங்கள், கூடாரங்கள் அல்லது ஏனைய நிரந்தரமற்ற சட்டகங்களின் கீழ் தயாரிக்கப்பட்ட நிர்மாணங்களுக்காக நட்டஈடு செலுத்தப்படாத போதிலும், நிதியத்தினால் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தமை. | இந்த கொடுப்பனவுகளுக்காக வீதவரி இலக்கம் மற்றும் வீதவரி பிரிவு ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இருப்பிடங்களுக்கு மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த காப்புறுதி முறைமையின் அடிப்படை விருப்பாவது பொருளாதார ரீதியில் அபாய வலயத்திலுள்ள பிரஜைகளை காத்தல் ஆகும். | சட்டங்கள் மற்றும் விதிகளின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் 2018 பெப்ரவரி 02 ஆந் திகதி ரூபா 290,000,000 தொகை கோரப்பட்டிருந்த போதிலும், நிதியத்தினால் அதற்காக 7.15 சதவீதமான வட்டி வீதத்திற்கு முதலீடு செய்யப்பட்ட ரூபா 780,000,000 தொகையன பெறுமதியுடைய நிலையான வைப்பொன்று முதிர்வடைவதற்கு முன்னர் பயிர்ச்செய்கை வரி நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 149,134,697 பெறுமதியானது நிறுத்தி வைக்கப்பட்டு ரூபா 140,865,303 மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தது. | குறுங்கால வைப்புகள் இல்லாதிருந்தமையால் எதிர்வரும் காலப்பகுதியில் வைப்புகள் முதிர்வடைவதற்கு முன்னர் (Pre-mature) கணக்கிற்கு மாற்றப்பட்டு துரிதமாக நட்டஈடு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறையான நடைமுறைகளின் அடிப்படையில் செயற்பட வேண்டியமை. |
| (ii) | அவ்வாறே விவசாய மற்றும் கமநல சபையிடமிருந்து ரூபா 250,380,277 தொகை மீண்டும் ஒரு தடைவ கோரப்பட்டிருந்ததுடன், சபையினால் 2018 நவம்பர் 01 ஆந் திகதி 8.55 சதவீத வட்டிக்கு முதலீடு செய்யப்பட்ட ரூபா 97,000,000 ஆன நிலையான வைப்பொன்று முதிர்வடைவதற்கு முன்னர் பயிர்ச்செயகை வரி நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டு, அவற்றுள் ரூபா 21,675,815 தொகை நிறுத்தி | | முறையான நடைமுறைகளின் அடிப்படையில் செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டு ரூபா 75,324,185 ஆன தொகை மாத்திரம் கமநல காப்புறுதி சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | தபால் மற்றும் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்களின் சங்கம் (The Union of Post and Tele communication Officers) மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு சபை ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிதியத்தினால் ரூபா 39,600,000 ஆன வைப்பொன்று சங்கத்திடம் வைக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிதியினை ஏனைய முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்தி நலன்களை ஈட்டுவதற்கான சந்தர்ப்பத்தினை நிதியம் இழந்திருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் ஆரம்ப வைப்பொன்று இல்லாது கட்டிடமொன்றினை நிறுத்தி வைக்க முடியாதென்பதால் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில வைப்புத் தொகைகள் தபால் மற்றும் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்களின் சங்கத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | நிதியம் உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டியமை. |

## 2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதியத்தின் மறு காப்புறுதி பிரிவின் 2015 ஆம் ஆண்டிற்குரியதாக விற்பனைகளுக்குரிய பற்றுச்சீட்டுகளின் அடிப்படையில் செலுத்த வேண்டிய ரூபா 42,434,299 தொகையான தரகுப் பணம் கணக்காய்வு திகதியான 2019 மே 06 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மறு காப்புறுதி பிரிவில் பற்றுச்சீட்டுகளுக்காக பெற வேண்டிய தவணை வருமானம் உரிய நிறுவனங்களிலிருந்து கிடைக்காமையால் இந்த செலுத்த வேண்டிய தரகுப் பணத்தினை ஈடு செய்ய முடியாதுள்ளது. இதனை பதிவளிப்பதற்காகவும் பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ii) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சாதாரண காப்புறுதி | 2019.03.31 ஆந் திகதியளவில் ரூபா 31,474,963.35 ஆன தொகை | மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மோட்டார் அல்லாத பிரிவிலிருந்து பெறவேண்டிய தவணை வருமானத்திற்குரிய ஐந்தொகை திகதியின் பின்னர் பெறுவனவுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு 2019 மார்ச் மாதம் அளவில் ரூபா 5,730,959 ஆன நிலுவைகள் காணப்பட்டன. | அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய பெற வேண்டிய வருமானத்திற்கு உரியதாக அவற்றின் அவற்றின் அறவிடப்பட வேண்டிய மீதிகளுக்காக உரிய காப்புறுதியாளர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். எதிர்காலத்தில் இந்த மீதிகளை அறவிட மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட வேண்டியமை. |
| (iii) | 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் பணி புறக்கணிப்பு, கலவரங்களில் ஈடுபடல், மக்கள் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் தீவிரவாத நிதியத்திற்கு (SRCC) உரியதாக தீர்க்கப்படாத ரூபா 18,509,275 ஆன உரித்து செலுத்துதல் (Non Motor) கணக்காய்வு திகதியான 2019 யூலை 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இது வரையிலும் தீர்ப்பனவு செய்யப்படாத உரித்து கொடுப்பனவுகளை புத்தகங்களிலிருந்து பதிவளிப்பதற்காக பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு அறிக்கையொன்றின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | மீதிகளை உரிய முறையில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (iv) | அக்ரஹார காப்புறுதி அங்கத்தவர்களின் தகவல்களினை உள்ளடக்கும் முறையான தரவு கட்டமைப்பொன்று (Data base) பராமரிக்கப்பட்டிராமை மற்றும் செலுத்த வேண்டிய உரித்துக்கள் உரிய நட்டஈடு கோரிக்கையாளர்களுக்கு தீர்க்கப்படாமை போன்ற நலிவுகளின் காரணமாக 2019 மே மாதம் வரையிலும் ரூபா 8,319,124 ஆன தீர்க்கப்படாத மீதிகள் நிலவியது. | வருடமொன்றிற்கு ரூபா 5,500 மில்லியன் இளவானது இவ்வாறு வங்கிகளுக்கு இடையேயான கொடுப்பனவுகளாக (SLIP) மூலம் கணக்குகளுக்கு நேரடியாக செலவு வைக்கப்படுவதுடன், அவற்றுள் 0.1% மாத்திரம் செலவு வைக்கப்படாது மீள திருப்பப்படுகின்றது (Return). அதன் காரணமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பின்னர் அதற்காக எஞ்சிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியமை. |
| (v) | நிதியத்தின் SRCC பிரிவிற்குரிய 2007 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,843,488 ஆன மீள செலுத்த வேண்டிய தவணை மீதி 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பல வருடங்களாக முன்கொண்டு வரப்படும் இந்த மீதிகளை பதிவளிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு பத்திரமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vi) | அக்ரஹார நட்டஈடு செலுத்துவதற்காக வழங்கப்படும் காசோலை இரத்தானமையால் 2018 | மீதிகளை துரிதமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், | உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு மீதிகளை தீர்ப்பனவு |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற வேண்டிய மீதியாக இனங்காணப்பட்ட ரூபா 2,632,770 ஆன் மீதியானது கணக்காய்வு திகதியான 2019 மே 08 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களுக்காக அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தி அதற்கான நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கின்றோம். | செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (vii) | 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,073,351 ஆக காணப்பட்ட போதிலும், நிதியத்தினால் காப்புறுதி நலனாளிகளுக்கு செலுத்த வேண்டிய மீதி 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் இறுதியில் ரூபா 1,513,897 ஆக மாற்றமின்றி காணப்பட்டது. அதன் பிரகாரம் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலணமாக முன்கொண்டு வரப்படும் பெறுமதியை தீர்ப்பனவு செய்ய நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | Slip return control crop insurance கணக்கில் காணப்படும் மீதிக்கான மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு இன்றளவிலும் பத்திரமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக நவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (viii) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிதியத்தின் பயிர்ச்செய்கை காப்பீட்டு கணக்கில் ரூபா 1,640,828,796 ஆன மீதியொன்று நிலவ வேண்டிய போதிலும், நிதியத்தின் நிதி முகாமையாளரால் கணக்காய்விற்கு வழங்கிய தகவலின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியத்தின் எஞ்சிய மீதி ரூபா 1,641,687,854 ஆகும். இந்த பணத்தில் பயன்படுத்தப்படும் சொத்துக்கள் தொடர்பில் கணக்காய்வினால் வினவியதுடன், அதற்கமைய முன்வைக்கப்பட்ட தகவலின் பிரகாரம் அவற்றுள் ரூபா 1,462,969,344 ஆன தேறிய பெறுமதியானது ஏனைய காப்புறுதி பிரிவொன்றிற்கு விடுவிக்கப்பட்ட காசாக அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும், இலங்கை காப்புறுதிக் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் 2017 யூன் 28 ஆந் திகதி வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் கோவை இலக்கம் IBSL/DG/SUP/17/06/233 இன் பிரகாரம் ஒவ்வொரு பிரிவுகளினதும் | அந்த பெறுமதியில் உள்ளடங்கியுள்ளது ஏனை காப்புறுதிப் பிரிவுகளுக்கு வழங்கிய பணம் ஆகும். தற்காலிக நிதி தேவைப்பாடொன்றிற்காக ஒவ்வொரு பிரிவுகளுக்கிடையே பணம் பறிமாறப்படல் எந்தவொரு நிறுவனத்தினதும் சாதாரண நடைமுறையொன்றாகும். அத்துடன், எமது நிறுவனமும் அவ்வாறு பயிர்ச் செய்கை வரி நிதியத்திலிருந்து காப்புறுதி நட்டஈடு செலுத்துவதற்காக ஏனைய பிரிவுகளுக்கு நிதி வழங்கியுள்ளது. | சட்டங்கள் மற்றும் விதிகளின் பிரகாரம் நவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | நிதியங்கள் அவை தாபிக்கப்பட்டமைக்கான நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ix) | நிதியத்தினால் பயிர்ச்செய்கை வரி செலுத்த வேண்டிய நிறுவனங்களுக்கு காலாண்டு மற்றும் வருடாந் அடிப்படையில் மாதிரிப் படிவமொன்றினை வழங்குவதுடன், கொடுப்பனவுகளை தாமதப்படுத்தும் நிறுவனங்களுக்கு தண்டப்பணம் தொடர்பில் அறிவித்து கடிதம் அனுப்பப்படும். எவ்வாறெனினும், அறவிடப்பட்ட தண்டப்பணம் பயிர்ச்செய்கை காப்புறுதி – வரி வருமானக் கணக்கில் கணக்கு வைப்பதனை தவிர அறவிடப்பட்ட தண்டப்பணத்தை தனியாக கணக்கொன்றில கணக்கு வைப்பதற்கு, பெற வேண்டிய தண்டப்பணத்தை கணிப்பிட்டு கணக்கு வைப்பதற்கு அல்லது வரி செலுத்துவதில் தாமதிக்கும் / புறக்கணிக்கும் நிறுவனங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய விதம் தொடர்பில் முறையான நடைமுறையொன்றினை தயாரித்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட்ட தண்டப்பணங்களுக்காக தனியான கணக்கொன்று பேணிச் செல்லப்பட்டிருக்காத போதிலும், பெறப்பட்ட தண்டப்பணங்கள் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2019 ஆம் ஆண்டு முதல் தண்டப்பணங்களை கணக்கு வைப்பதற்காக தனயானதொரு பேரேட்டுக் கணக்கொன்று திறக்கப்பட்டுள்ளது. அபற வேண்டிய தண்டப்பணங்களை தனியாக கணக்கு வைப்பதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டியமை. |
| (x) | 06 நிறுவனங்களால் 2017/18 ஆம் ஆண்டிற்காக இந்த ரூபா 2,386,165 தொகையான பயிர்ச்செய்கை காப்புறுதி வரி மற்றும் அதன் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட ரூபா 270,313 தொகையான தண்டப்பணம் மற்றும் கணக்காய்வு திகதியான 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை என்பதும் அந்த தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நிதியத்தினால் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் மாதிரியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களால் 2017/2018 ஆம் ஆண்டிறகாக பயிர்ச்செய்கை காப்புறுதி வரி மற்றும் அதன் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட தண்டப்பணம் கணக்காய்வு திகதியான 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிராததுடன், அந்த நிறுவனங்களுக்காக நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்புவதற்கு சபையினால் நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானங்களை துரிதமாக அறவிடுவதற்கு நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (xi) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியத்திற்குரிய 189 தீர்க்கப்படாத வழக்குகள் காணப்பட்டதுடன், அதற்காக கோரிக்கை விடுத்த அளவில் மொத்த பெறுமதி ரூபா 773,579,952 ஆக இருந்ததுடன், பல வருடங்களாக முன்கொண்டு வரப்படுகின்மை அவதானிக்கப்பட்டது. | வழக்கு தொடரப்பட்ட நாள் தொடக்கம் நீதிமன்றத்தினால் இறுதி தீர்ப்பு வழங்கும் திகதி வரையிலும் பின்பற்றப்பட வேண்டிய பல்வேறு படிமுறைகள் காணப்படுவதுடன், அதன் படிமுறைகளை விஞ்சி எமது சட்டப் பிரிவிற்கு வழக்கு நடவடிக்கைகளை முடிவுறுத்தும் இயலுமை காணப்படவில்லை. | தீர்க்கப்படாத வழக்குகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது. |
| (xii) | **செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமான செயலாற்றல்**<br>நிதியத்தின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமான செயலாற்றல் பின்வருமாறு ஆகும்.<br>**I. மறு காப்புறுதி பிரிவு** | | |
| | i. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது மோட்டார் மற்றும் மோட்டார் இல்லாத சாதாரண காப்புறுதிகளுக்காக மறு காப்புறுதி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த பணியின் ஆரம்ப நடவடிக்கைகள் கணக்காய்வு திகதி வரையிலும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை . | 2019/2020 ஆண்டிற்காக மோட்டார் மற்றும் மோட்டார் அல்லாத சாதாரண காப்புறுதிக்காக மறு காப்புறுதியினை பெற்றுக்கொள்வதற்கான பெறுகை நடவடிகடகைகள் இன்றளவிலும் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்டுள்ள பணிகள் உரிய முறையில நிறைவு செய்யப்பட வேண்டியமை. |
| | ii. மறு காப்புறுதி மற்றும் நட்டஈடு செலுத்தும் நடைமுறை கட்டமைப்பு அறிக்கையொன்று வழங்குதலும் உள்ளடங்களாக தன்னியக்கப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் அந்த பண ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மறு காப்புறுதி நடவடிக்கைகள் மற்றும் நட்டஈடு செலுத்தும் செயன்முறையிலும் சுமார் 75% ஆன அளவினை தன்னியக்கப்படுத்தி உள்ளதுடன், நட்டஈடு செலுத்தும் போது காணப்படும் பல்வகைத்தன்மை மற்றும் சிக்கலான தன்மையை கருத்திற்கொண்டு சில கொடுப்பனவுகளுக்காக தேவையான நடைமுறையை ஆயரெயட முறைமைக்கு தற்போது மேற்கொள்ளப்படுவதுடன், அந்த கொடுப்பன பணிகளுக்காக ஆயரெயட முறைமை | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்டுள்ள பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | பயன்படுத்துவதற்காக தற்போதுள்ள முறைமைக்கு ஒப்பாக இலகுவானது மற்றும் சரியானது என்பதை உறுதி செய்கின்றோம். | |
| iii. | 2018 ஆம் ஆண்டிற்காக மறு காப்புறுதி தொடர்பில் சர்வதேச மட்டத்தில் அறிவுறுத்தும் 01 மாநாடு, உள்நாட்டு மட்டத்தில் அறிவுறுத்தும் மாநாடுகள் 04 (காலாண்டிற்கு ஒன்று வீதம்) நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2019 மே 14 ஆந் திகதி வரையிலும் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | மறு காப்புறுதிக்கான 4 பெறுகை முறைமைகள் 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டதுடன், அவை மிகவும் பரந்த அளவில் அனைத்து தொழில்நுட்பத்தினயும் தேடி பயன்படுத்தி அந்த நடைமுறையை முழுமைப்படுத்துவதற்கு உச்ச பங்களிப்பினை வழங்க நேர்ந்தமையால் அதில் உள்ள கட்டாயமான தேவைப்பாட்டின் காரணத்தினாலும், இவ்வாறான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் கூடியளவான காலத்தினை செலவிட முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்டுள்ள பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியமை. |

### II. சாதாரண காப்புறுதி – மோட்டார் அல்லாத

| | | | |
|---|---|---|---|
| i. | 2017 ஆம் ஆண்டினுள் ஒருங்கிணைந்த வெளிநாட்டு காப்புறுதி உரித்தொன்று அதாவது தற்போது காணப்படும் காப்புறுதி முறைமையை பரவலாக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது 2018 ஆம் ஆண்டினுள் அல்லது நடைமுறைப்படுத்தப்படாது 2019 ஆம் ஆண்டு வரையிலும் கால அட்டவணை நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டினுள் திட்டமிடப்பட்டிருந்த காப்புறுதி முறைமையை பரவலாக்க 2017 ஆம் ஆண்டினுள் மறு காப்புறுதியினை பெற்றுக்கொள் முடியாதிருந்ததுடன், இது வரையிலும் அது தொடர்பில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்டுள்ள பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியமை. |
| ii. | அகரஹார காப்புறுதியின் மூலம் பொது சுகாதார காப்புறுதி முறையொன்று பகுதிகளாக | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஓய்வு பெற்றுச் சென்றவர்களுக்காக அக்ரஹார காப்புறுதியினை | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்டுள்ள |

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு துறைக்காகவும் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பகுதியளவு அரச நிறுவனங்களில் மாத்திரம் அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், தனியார் பிரிவின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொடுப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது முன்னோடியாக கொண்டு செயற்பட்டிருந்ததுடன், தற்போது அதற்காக அமைச்சரவை அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளதுடன், பாதீட்டினூடாக அதற்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. | பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியமை. |

**III நிதி பிரிவு**

| | | |
|---|---|---|
| நிதியம், மறு காப்புறுதி மற்றும் சாதாரண காப்புறுதி என வேறுபடுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் 2019 ஆம் ஆண்டு வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரச நிறுவனங்களை மீள் கட்டமைத்தல் உலக வங்கியின் பிரதிநிதிகளுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படுகின்றமையால் அவர்களின் செயல்நடவடிக்கை திட்டங்களுக்கு இணங்கும் வகையில் செயற்படும் போது உரிய திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு அந்த காலப்பகுதியினுள் நிறைவு செய்ய முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்டுள்ள பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியமை. |

**IV இயற்கை அனர்த்தங்கள்**

| | | |
|---|---|---|
| இந்த பிரிவிற்காக காப்புறுதிக் கைத்தொழிலினால் இயற்கை அனர்த்தங்களுக்கான ஒழுங்கமைப்பொன்று (Disaster Pool) நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்காக தகவல் அறிக்கையொன்றின வழங்குவதற்கும், அந்த அமைப்பிலிருந்து கிடைக்கும் நலன்கள் தொடர்பில் காப்புறுதிக் கைத்தொழிலினை அறிவுறுத்தவும், தரப்படுத்தவும், இயற்கை அனர்த்த ஒழுங்கமைப்பிற்காக சட்டகமொன்றினை தயாரிப்பதற்கும், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவொன்றினை | குறித்த இயற்கை அனர்த்தங்கள் தொடர்பல் காப்புறுதி நிதி ஒழுங்கமைப்பொன்றினை பேணிச் செல்வதற்காக உத்தேசித்த போதிலும், காப்புறுதித் துறையின் பாதகமான விளைவுகளின் காரணமாக இதனை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்டுள்ள பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியமை. |

உருவாக்குவதற்கும் போன்ற பணிகளுக்காக உத்தேசிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், கணக்காய்வு திகதியான 2019 மே 14 ஆந் திகதி வரையிலும் இதற்குரிய எந்தவொரு பணியும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## V. விவசாயக் காப்புறுதி மற்றும் நுண் காப்பீடு

2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தில் தாபித்தமைக்கான பிரதான நோக்கமான நுண் காப்புறுதியின் மூலம் புலம்பெயர்ந்த ஊழியர்களுக்கும் கால்நடை வளங்கள் மற்றும்விவசாயிகளுக்கும் உள்ளடங்கும் வகையில் காப்பீடொன்றினை அறிமுகம் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை .

புலம்பெயர்ந்த ஊழியர்களுக்கான காப்புறுதி நடவடிக்கைகள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே அந்த நிறுவனத்தினால் கூறுவிலைகள் கோரப்பட வேண்டும்.
'கொவி திவி அருண காப்புறுதி' விவசாயிகளுக்காக காப்பீடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், திட்டமிடப்பட்ட செயற்திட்டமாக அநுராதபுரம் கிளையினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டவாறு காணப்படுகின்றதுடன், ஏனைய கிளைகளினூடாக நடைமுறைப்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.
பயிர்ச்செய்கை வரியினை பயன்படுத்தி விளைச்சலினாலான சேதங்களுக்காக விவசாயிகளுக்காக கொடுப்பனவுகளை மேறகொள்வதற்கு விவசாய காப்புறுதி சபைக்கு நிதியேற்பாடு வழங்கப்படுகின்றது.

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்டுள்ள பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியமை.

## VI. தகவல் தொழில்நுட்ப பிரிவு

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தகவல் தொழில்நுட்ப பிரிவிற்காக புதிய கட்டமைப்பொன்றினை தாபிக்கவும், அதற்கான மீளாய்வுகளை மேற்கொள்ளல், குறைபாடுகளை தீர்மானத்தல்,

இது தொடர்பில் உரிய மதியுரை சேவைகளை வழங்குவதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணங்கி அதற்கான முன்மொழிவுப் பத்திரமொன்றினை எமக்கு முன்வைக்க அவர்கள் இணங்கியிருந்தனர். அதற்கமைய

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்டுள்ள பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டியமை.

| | |
|---|---|
| வெளிவாரி வளங்களை பயன்படுத்தி இது தொடர்பில் மதிப்பீடொன்றினை மேற்கொள்ளல் ஆகியன தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு உரியதாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவர்களால் வழங்கப்படும் முன்மொழிவுப் பத்திரம் பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட் அதற்கான மேலதிக பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது. |

## 2.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | நிதியம் மற்றும் மறு காப்புறுதி நிறுவனத்துடன் 2018.03.31 ஆந் திகதி முதல் 2019.03.31 ஆந் திகதி வரையிலும் மறு காப்புறுதி உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்ததுடன்,ஆண்டினுள் அதற்காக ரூபா 98,670,792 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அந்த மறு காப்புறுதி உடன்படிக்கை மற்றும் மறு காப்புறுதியினை தெரிவு செய்வதுடடன் தொடர்புடைய பெறுகை தகவல்கள் நிதியத்திடம் காணப்படவில்லை. | 2018 மார்ச் 27 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவை பத்திர இலக்கம் 18/0524/728/017 ரீபீஆர் இன் கீழ் மறு காப்புறுதியினை பெற்றுக்கொள்வதன் மூலம் 30மூ ஆன பொறுப்பு தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த மறு காப்புறுதி உடன்படிக்கை மற்றும் மறு காப்புறுதியினை தெரிவு செய்வதனுடன் தொடர்புடைய பெறுகை ஆவணங்கள் விவசாய கைத்தொழில் மற்றும் கமநல சபைக்கு சொந்தமானது ஆகும். அதனால் அது தொடர்பில் அந்த நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். | உரிய அனைத்து ஆவணங்களும் பேணப்பட வேண்டும். |
| (ii) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,838,208 ஆன கிரயத்தில் நிலையான சொத்துக்களின் பௌதீக பரிசோதனையொன்று மற்றும் மீள்மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இது தொடர்பில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது பெறுகைத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. விலைக்கேள்வி கோரல் | சொத்துக்களின் மீள்மதிப்பீடு மற்றும் நிலையான சொத்துக்களின் பதிவேடுகளை நாளதுவரையாக்குவதற்கான தேவைப்பாடு மிகவும் உயரியது என்பதால் பெறுகை திட்டங்கள் இல்லாதிருந்த போதிலும், அது நடைமுறைப்படுத்தப்பட்டது.<br><br>இலங்கையின் பிரசித்திபெற்ற ஐந்து கணக்காய்வாளர்களின் | சட்டங்கள் மற்றும் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் விலைக்கேள்வி கோரல் கடிதங்கள் 05 நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனங்களை தெரிவு செய்த அடிப்படை கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படவில்லை. | முன்மொழிவுகள் கோரப்பட்டிருந்தது. உரிய காலப்பகுதியினுள் கூறுவிலைகள் கிடைத்திருக்காமை காரணத்தினால் கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த காலத்தனை நீடிப்பு செய்வதற்கு நேர்ந்தது. | |
| 2017 யூலை 10 ஆந் திகதி கூறுவிலை கோரப்பட்ட இந்த பெறுகை பணியின் விலைக்கேள்வியாளர் ஒருவரை தெரிவு செய்தல் 2018 சனவரி 23 ஆந் திகதி அதாவது 06 மாதங்களின் பின்னர் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்த 'Coding System' மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஆகியவற்றை தயாரிப்பதற்காக மீண்டும் கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு குறிப்பிட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சிரேஸ்ட மட்டத்திலான 05 வெற்றிடங்கள் நிலவியதுடன், அதனுள் உதவி பொது முயாமையாளர் பதவியொன்று, 03 முகாமையாளர் பதவிகள் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்று உள்ளடங்கியிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவியும் உள்ளடங்களாக மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு ஐயவினாக்களின் | இந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் முகாமையாளர்களுக்கும் தேவையான அனைத்து கல்வி தகைமைகள் மற்றும் விடயம் தொடர்பான அனுபவம் உள்ளதுடன், ஆட்சேர்ப்பு நடைமுறையில் கோரப்பட்டுள்ள 15 வருட சேவைக்காலத்தினை கொண்டிராமையால் மாத்திரம் அவர்கள் பதிற்கடமை முகாமையாளர் பதவியில் வைக்கப்பட்டுள்ளார். எனினும், காப்புறுதித் துறையில் முகாமையாளர் ஒருவரை நியமிப்பதற்காக தேவையான சேவைக்காலத்திை மாற்றியமைப்பதற்காக | நிரந்தர உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | மூலமும் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு நடைமுறைப்படுத்தாது அந்த பதவிகளுக்காக 2018 செப்தம்பர் மாதம் முதல் இது வரையிலும் பதிற்கடமை அடிப்படையில் பதவிகளை நிரப்புவதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் சம்பள படிநிலைகள் உருவாக்குதல் ஆணைக்குழுவிற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். | |
| (ii) | தாபன விதிக்கோவையின் ஐஐ ஆம் அத்தியாயத்தின் 13.3 பந்தியின் பிரகாரம் பதிற்கடமை நியமனம் வழங்கமுடியுமானது நிரந்தர நியமனமொன்றை மேற்கொள்ளும் வரையிலும் தற்காலிக மாற்றீடாக மாத்திரமாக இருக்க வேண்டிய போதிலும், நிரந்தர நியமனமொன்றினை மேற்கொள்ளாது 04 பதவிகளுக்காக 2018 செப்தம்பர் மாதம் முதல் இது வரையிலும் பதிற்கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்த காரணத்தினால் அது தாபனவிதிக் கோவையின் தேவைப்பாடுகளுடன் இணங்கவில்லை. | | நிரந்தர உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (iii) | மூன்றாம் மற்றும் இரண்டாம் மட்டங்களில் 31 எண்ணிக்கையான பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அந்த பதவிகள் கணக்காய்வு திகதியான 2019 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உதவி முகாமையாளர் 2019.09.02 ஆந் திகதி முதல் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். அபாய முகாமையாளர் - பொறியியல் பதவிக்குரியதாக நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆயட்கால கணிப்பீட்டு முகாமையாளர் பதவிக்காக விண்ணப்பங்களை கோருவதற்காக பத்திரிக்கை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பதவிகள் எதிர்காலத்தில் நிறுவனத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் தகுதிவாய்ந்த நபர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிரந்தர உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஐ) | மூன்றாம் நிலையிலான 04 பதவி வெற்றிடங்களிடையே 2017 ஆம் | அதற்கமைய எம்மால் அபாய முகாமைத்துவ | அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களை கூடியளவு |

ஆண்டின் போது ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆயட்கால மதிப்பீடு (Acturial), முகாமையாளர் மற்றும் அபாயப் பிரிவின் பொறியியலாளர் பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவி அமைப்புக்குறிப்பீடுகளுக்கமைய அந்த பதவிகளை நிதியத்தின் பணிகளுக்காக அத்தியாவசியமான பதவிகளானதுடன், 2006 ஆம் ஆண்டு முதல் காப்புறுதி துறையில் ஈடுபட்டுள்ள நிதியத்தினால் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பொறியியலாளருக்காக பத்திரிக்கை அறிவித்தல் வெளியிட்டு தற்போது அதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வாறே இது வரையிலும் ஆயட்கால முகாமையாளர் பதவிக்காக விண்ணப்பம் கோருவதற்கக பத்திரிக்கை அறிீத்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை.

# நிதி நிலைக் கூற்று

**விரிவான வருமான அறிக்கை**

2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி நிறைவடையும் போது

| | குறிப்புகள் | 10/Jul/05 ரூபா. | 09/Jul/05 ரூபா. |
|---|---|---|---|
| தேறிய எழுதப்பட்ட தவணைக் கட்டணம் | 1 | 9,683,874,748 | 9,071,278,467 |
| அக்ரஹாராவிற்கு கிடைத்த பங்களிப்புக்கள் | 1 | 4,017,420,904 | 2,726,522,599 |
| சேகரிக்கப்பட்ட பயிர் காப்புறுதி அறவீடு | | 2,138,167,676 | 1,878,361,459 |
| வழங்கப்பட்ட மீள்காப்புறுதி தவணைக் கட்டணங்கள் | | (2,460,537,699) | (1,146,635,715) |
| SRCC & Tr நிதிக்கு வழங்கப்பட்டவை | | (25,439,340) | (28,647,172) |
| **தேறிய எழுதப்பட்ட தவணைக்கட்டணம்** | | **13,353,486,289** | **12,500,879,639** |
| உழைக்கப்படாத தவணைக்கட்டண ஒதுக்கத்தின் தேறிய மாற்றம் | | 299,945,178 | (887,050,657) |
| **தேறிய உழைக்கப்பட்ட தவணைக் கட்டணம்** | | **13,653,431,467** | **11,613,828,982** |
| **ஏனைய செயற்பாடுகளிலிருந்தான வருமானம்** | | | |
| கட்டணமும் தரகு வருமானமும் | 2 | 6,467,415 | 6,350,874 |
| முதலீடும் ஏனைய வருமானமும் | 3 | 1,343,399,914 | 1,143,209,930 |
| **ஏனைய வருமானம்** | | **1,349,867,329** | **1,149,560,805** |
| காப்புறுதி மொத்த நன்மைகள் மற்றும் உரிமைசே | 4 | (9,763,499,280) | (11,455,239,706) |
| மீள்காப்புறுதியாளர்களுக்கு வழங்கப்பட்ட கோரிக் | 4 | | |
| ஒப்பந்தப் பொறுப்புக்களிலான மொத்த மாற்றம் | 4 | 1,554,911,720 | 2,077,748,294 |
| மீள்காப்புறுதியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த | 4 | (1,016,766,143) | (239,679,294) |
| IBNR இன் மொத்த மாற்றம் | 4 | (465,294,517) | (283,528,663) |
| **தேறிய நன்மைகளும் கோரிக்கைகளும்** | | **(9,690,648,221)** | **(9,900,699,368)** |
| எழுத்துறுதியும் கையகப்படுத்தல் செலவும் ( மீள் | 5 | (1,608,994,211) | (1,440,826,507) |
| பிற செயற்பாட்டு மற்றும் நிர்வாக செலவுகள் | 6 | (414,816,836) | (344,678,298) |
| **மொத்த நன்மைகள், கோரிக்கைகள் மற்றும் ஏனைய செலவுகள்** | | **(11,714,459,268)** | **(11,686,204,174)** |
| **வரிக்கு முன்னரான இலாபம் /(நட்டம்)** | | **3,288,839,528** | **1,077,185,612** |
| வருமான வரிச் செலவு | | (105,600,662) | (100,951,677) |
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | **3,183,238,866** | **976,233,935** |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான நிகர மாற்றம் | | 131,176,710 | 208,755,171 |
| ஓய்வூதிய நலனில் உண்மையான இலாபம்/(நட்டம்) | | (9,075,505) | (8,699,331) |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மறுமதிப்பீட்டு பற்றாக்குறை | | (2,102,126) | - |
| **ஆண்டிற்கான விரிவான வருமானம், வரி தேறியது** | | | |
| **மொத்த விரிவான வருமானம்** | - | **3,303,237,946** | **1,176,289,775** |

## நிதி நிலைமை அறிக்கை

2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு

| | குறிப்புகள் | 2018<br>ரூபா. | 2017<br>ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| கட்புலனாகாச் சொத்துக்கள் | 7 | 2,806,809 | 1,377,708 |
| சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணா | 8 | 29,362,528 | 39,470,985 |
| நிதிச் சொத்துக்கள் | 9 | 10,674,617,497 | 8,161,427,792 |
| பெறவேண்டிய மீள்காப்புறுதி | 10.1 | 1,468,768,756 | 4,574,100,921 |
| பெறவேண்டிய தவணைக் கட்டணம் | 10.2 | 1,548,824,733 | 2,109,164,970 |
| மென்கடன்கள் | 11 | 5,725,010 | 14,069,897 |
| ஏனைய நிதி அல்லாத சொத்துக்கள் | 12 | 98,479,866 | 1,922,337,050 |
| ஒத்திவைக்கப்பட்ட தரகு | 13 | 620,751,687 | 597,083,610 |
| வங்கியில் மற்றும் கையிலுள்ள காசு | 14 | 1,145,855,712 | 1,133,642,497 |
| **மொத்த சொத்துக்கள்** | | **15,595,192,598** | **18,552,675,429** |
| | | | |
| **பங்குகளும் பொறுப்புக்களும்** | | | |
| நிறுத்திவைத்த ஈட்டுதல்கள் | | 7,424,644,966 | 7,213,150,131 |
| பங்குகளின் பிற கூறுகள் | | (466,454,792) | (66,791,641) |
| மறுமதிப்பீட்டு இருப்பு | | (2,102,126) | - |
| **மொத்த பங்குகள்** | | **6,956,088,047** | **7,146,358,490** |
| | | | |
| **பொறுப்புக்கள்** | | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்கள் | 17 | 7,531,205,639 | 8,879,856,741 |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள் | 18 | 28,510,041 | 29,660,364 |
| ஏனைய பொறுப்புக்கள் | 15 | 1,075,776,134 | 2,496,799,835 |
| வங்கி மேலதிகப் பற்று | 14 | 3,612,734 | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **8,639,104,548** | **11,406,316,939** |
| **மொத்தப் பங்குகளும் பொறுப்புக்களும்** | | **15,595,192,598** | **18,552,675,429** |

நிதியத்தின் நிதிநிலை அறிக்கை இலங்கை கணக்கியல் தரநிலைகளின் தேவைகளுக்கு இணங்குகிறது என்பதை நான் சான்றளிக்கின்றேன்.

ஜே.ஏ.டீ. சிரிவர்தன
பிரதம நிதி அதிகாரி
உதவிப் பொது முகாமையாளர் - நிதி

சனத் சீ. டீ சில்வா
பிரதம நிறைவேற்று அதிகாரி

5 முதல் 42 வரையான பக்கங்களில் உள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளீன் ஒருங்கிணைந்த பகுதியாகும், நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வழங்குவதற்கு பணிப்பாளர் குழுவினர் பொறுப்பாக இருப்பார்கள். இந்த நிதி நிலை அறிக்கைகள் பணிப்பாளர் குழுவனரால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

மஞ்சுல டீ சில்வா
தலைவர்

பணிப்பாளர்

| | நிறுத்திவைத்த ஈட்டுதல்கள் ரூபா. | நிதிச் சொத்துக்கள் விற்பனைக்காக உள்ளவை ரூபா. | கட்டுப்படுத்தாத வட்டி ரூபா. | மொத்த உரிமையாண்மை ரூபா. |
|---|---|---|---|---|
| **2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி** | 8,744,382,870 | (88,871,109) | | 8,655,511,761 |
| ஆண்டிற்கான இலாபம் | 2,839,751,855 | | | 2,839,751,855 |
| விற்பனைக்குள்ள நிதிச்சொத்துக்களின் தேறிய மாற்றம் | | (182,717,265) | | (182,717,265) |
| பணிக்கொடை மதிப்பீட்டில் உண்மையான இலாபம் | | 4,740,893 | | 4,740,893 |
| விலைப்பட்டியல் மீள்காப்புறுதியை இரத்துச் செய்தல் | (34,714,833) | | | (34,714,833) |
| திரட்டிய நிதிக்கு மாற்றப்பட்ட பணம் | (3,200,000,000) | | | (3,200,000,000) |
| செலுத்த வேண்டிய வருமான வரி 2012∴13 | (578,674,926) | | | (578,674,926) |
| பிணைகள் மீதான கழிவுகளை தவணைக் கட்டணக் கடன் கரைப்பு | 47,663,316 | | | 47,663,316 |
| தேய்மானங்களை சரிசெய்தல் | 2,614,431 | | | 2,614,431 |
| தவணைக் கட்டண மீளளப்புச் சீராக்கங்கள் | 7,306,615 | | | 7,306,615 |
| SLIPS மோட்டார் அல்லாத திரும்பல் | 22,500 | | | 22,500 |
| மோட்டார் வாகன தவணைக் கட்டணம் | (75,000) | | | (75,000) |
| பதிவளிப்புச் செய்த செலுத்தப்பட்ட வைப்பு | (392,000) | | | (392,000) |
| மீள்காப்பறுதி தவணைக் கட்டணச் சீராக்கம் | 3,869,230 | | | 3,869,230 |
| வாடகைச் செலவு | (48,450) | | | (48,450) |
| **2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 7,831,705,609 | (266,847,481) | | 7,564,858,128 |
| ஆண்டிற்கான இலாபம் | 976,233,935 | | | 976,233,935 |
| விற்பனைக்காகவுள்ள நிதிச் சொத்துக்களின் தேறிய மாற்றம் | | 208,755,171 | | 208,755,171 |
| திரட்டிய நிதிக்கு மாற்றப்பட்ட பணம் | (1,500,000,000) | | | (1,500,000,000) |
| ஆண்டிறுதி முடிவு வேறுபாடு | (44,253,311) | | | (44,253,311) |
| செலுத்த வேண்டிய வருமான வரி 2016/2017 | (97,669,225) | | | (97,669,225) |
| பிணைகள் மீதான கழிவுகளை தவணைக் கட்டணக் கடன் கரைப்பு | 26,235,147 | | | 26,235,147 |
| பயிர் AAIB மீளளப்பு | 42,871,673 | | | 42,871,673 |
| ஊக்குவிப்புக்கள் 2016 | (3,140,650) | | | (3,140,650) |
| RI பொதுத் தவணைக் கட்டணம் | (2,921,713) | | | (2,921,713) |
| ஆரம்ப - AR கட்டுப்பாடு RI | (38,856,406) | | | (38,856,406) |
| ஆரம்பு - AR கட்டுப்பாடு மோட்டார் அல்லாதது | 83,109,718 | | | 83,109,718 |
| மறுதளிக்கப்பட்ட காசோலை | (324,575) | | | (324,575) |
| ETF 3% | 305,147 | | | 305,147 |
| மோட்டார் வைக்கிள் முற்பணம் மற்றும் மோட்டார் பெறுவனவுகள் | (57,582,588) | | | (57,582,588) |
| ESC | (2,068,743) | | | (2,068,743) |
| ஏனைய முன்னைய வருட சீராக்கம் | (493,887) | | | (493,887) |
| பணிக்கொடை மதிப்பீட்டில் இயல்பான (இலாபம்)/நட்டம் | | (8,699,331) | | (8,699,331) |
| | **7,213,150,131** | **(66,791,641)** | **-** | **7,146,358,490** |
| ஆண்டிற்கான இலாபம் | 3,183,238,866 | | | 3,183,238,866 |
| | | | | - |
| விற்பனைக்காகவுள்ள நிதிச் சொத்துக்களின் தேறிய மாற்றம் | | (390,587,646) | | (390,587,646) |
| பணிக்கொடை மதிப்பீட்டில் உண்மையான இலாபம் | (2,750,000,000) | | | (2,750,000,000) |
| சொத்துக்களுக்கான மறு மதிப்பீடு | | | (2,102,126) | (2,102,126) |
| அகற்றப்பட்ட மோட்டார் வாகனத்தின் மறுமதிப்பீடு | 6,276,415 | | | 6,276,415 |
| பிணைகள் மீதான கழிவுகளை தவணைக் கட்டணக் கடன் கரைப்பு | 25,070,657 | | | 25,070,657 |
| NNDIS மறுசீரமைப்பு மற்றும் சீராக்கக் கட்டணம் | (291,472,452) | | | (291,472,452) |
| RETRO RI பெறத்தக்க பரிமாற்ற நட்டம் | (3,888,779) | | | (3,888,779) |
| விலைப்பட்டியலை தீர்த்தல் மற்றும் CN இரத்துச் செய்தல் | 41,810,528 | | | 41,810,528 |
| RI இன் தவறவிடப்பட்ட விலைப்பட்டியலின் ஆரம்ப நிலுவை | 10,980,047 | | | 10,980,047 |
| NNDIS இன் இரத்துச் செய்யப்பட்ட காசோலை | 12,682,341 | | | 12,682,341 |
| இரத்துச் செய்யப்பட்ட காசோலை | 2,080,928 | | | 2,080,928 |
| பிணை பங்கீட்டு அட்டைக்கான வட்டி | (8,856,250) | | | (8,856,250) |
| சம்பளத் திருத்தம் | (1,037,300) | | | (1,037,300) |
| பணமாக்கலின் போதான விடுவிப்பு | (2,764,983) | | | (2,764,983) |
| நகல் CN இரத்துச் செய்தல் RI | (7,458,551) | | | (7,458,551) |
| தலைகீழான யூரோ அமைரிக்க டொலர் பரிமாற்றம் | (5,082,679) | | | (5,082,679) |
| பிற் முன்னைய ஆண்டு சீராக்கங்கள் | (83,955) | | | (83,955) |
| பணிக்கொடை மதிப்பீட்டின் இயல்பான (இலாபம்) /நட்டம் | | (9,075,505) | | (9,075,505) |
| **2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய நிலவரப்படி இருப்பு.** | 7,424,644,965 | (466,454,792) | (2,102,126) | 6,956,088,048 |

5 முதல் 33 ஆம் பக்கங்களில் உள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.
அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிவிவரங்கள் கழிப்பினைக் குறிக்கின்றன.

2018 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான

| | | 2018 | 2017 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 3,288,839,528 | 1,077,185,612 |
| **சீராக்கங்கள் :** | | | |
| வட்டி வருமானம் | | (1,168,986,729) | (1,138,264,819) |
| தேய்மானம் | | 12,452,639 | 7,316,750 |
| கடன் தொகை | | 273,100 | |
| தேறிய நியாய பெறுமதி மாற்றங்கள் | | (399,663,151) | 200,055,840 |
| முன்னைய ஆண்டு சீராக்கங்கள் | | (228,020,447) | (94,789,413) |
| நிலையான சொத்துக்களை அகற்றுவதில் ஏற்பட்ட இ(லாபம்)/நட்டம் | | (2,352,313) | (4,945,111) |
| | | **1,502,542,627** | **46,558,859** |
| செயற்பாட்டுச் சொத்துக்களில் மாற்றம் | A | 5,465,861,509 | (1,690,242,910) |
| செயற்பாட்டுப் பொறுப்புக்களில் மாற்றம் | B | (2,876,425,787) | (370,495,553) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | 4,091,978,349 | (2,014,179,604) |
| செலுத்திய பணிக்கொடை | | - | - |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உருவாக்கப்பட்ட தேறிய காசு | | 4,091,978,349 | (2,014,179,604) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| நிதி முதலீடுகளின் தேறிய அகற்றல் /(கையகப்படுத்தல்) | | (2,513,189,705) | 3,026,416,582 |
| பெற்ற வட்டி | | 1,168,986,729 | 1,138,264,819 |
| மென் கடன்களை மீளப்பெறல் | | 8,344,887 | 53,011,374 |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அகற்றுதல் | | 9,018,980 | 6,029,880 |
| கட்புலனாகாச் சொத்துக்களை கையகப்படுத்தல் | | (1,702,201) | (1,377,708) |
| சொத்துக்கள், பொறுதிதொகுதிகள் மற்றும் உபகரணங்களைக் கையகப்படுத்தல் | | (4,836,560) | (4,813,960) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | (1,333,377,870) | 4,217,530,986 |
| **நிதியீட்ட நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| திரட்டு நிதியிலிருந்து மாற்றப்பட்ட காசு | | (2,750,000,000) | (1,500,000,000) |
| நிதியீட்ட நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | (2,750,000,000) | (1,500,000,000) |
| **காசும் காசையொத்தவைகளிலும் தேறிய அதிகரிபப்பு / (குறைவு)** | **இ** | 8,600,480 | 703,351,381 |
| வருட ஆரம்பத்திலிருந்த தேறிய காசும் காசையொத்தவையும் | | 1,133,642,497 | 430,291,116 |
| வருட இறுதியிலிருந்த தேறிய காசும் காசையொத்தவையும் | | 1,142,242,978 | 1,133,642,497 |

**காசுப் பாய்ச்சல் கூற்றிற்கான குறிப்புகள்**

| | | |
|---|---|---|
| **A. செயற்பாட்டுச் சொத்துக்களில் மாற்றம்** | | |
| ஒத்திவைக்கப்பட்ட தரகில் (அதிகரிப்பு)/ குறைவு | (23,668,078) | (114,174,700) |
| கிடைக்க வேண்டிய மீள்காப்புறுதித் தவணைக் கட்டணத்தில் (அதிகரிப்பு)/ குறைவு | 3,105,332,165 | 954,701,929 |
| கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணத்தில் (அதிகரிப்பு)/ குறைவு | 560,340,237 | (768,324,524) |
| ஏனைய நிதி அல்லாத சொத்துக்கள் (அதிகரிப்பு) / குறைவு | 1,823,857,184 | (1,762,445,615) |
| | 5,465,861,509 | (1,690,242,910) |
| **B. செயற்பாட்டுப் பொறுப்புக்களில் மாற்றம்** | | |
| காப்புறுதி ஒப்பந்தப் பொறுப்புக்களில் அதிகரிப்பு / (குறைவு) | (1,348,651,101) | (915,379,769) |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டில் அதிகரிப்பு / (குறைவு) | (1,150,323) | 14,569,494 |
| ஏனைய பொறுப்புக்கள் அதிகரிப்பு / (குறைவு) | (1,526,624,363) | 530,314,722 |
| | (2,876,425,787) | (370,495,553) |
| **C. காசும் காசையொத்தவைகளிலும் அதிகரிப்பு / (குறைவு)** | | |
| வருட இறுதியில் தேறிய காசும் காசையொத்தவைகளும் | 1,142,242,978 | 1,133,642,497 |
| கழிக்க : வருட ஆரம்பத்தில் தேறிய காசும் காசையொத்தவைகளும் | 1,133,642,497 | 430,291,116 |
| தேறிய காசும் காசையொத்தவைகளும் அதிகரிப்பு / (குறைவு) | 8,600,481 | 703,351,381 |

**நிறுவனத் தகவல்**

**1.1 நிறுவனத்தினை அறிக்கையிடல்**

2007 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியச் சபை (சபை) 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் மூலம் இலங்கையினுள் நிறுவப்பட்டுள்ளது. சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இல. 97, மருதானை வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் அமைந்துள்ளதுடன் பிரதான தொழில் தளமும் இம்முகவரியிலேயே அமைந்துள்ளது.

**1.2 தாய் நிறுவனமும் இறுதியான தாய் நிறுவனமும்**

பணிப்பாளர் சபையின் தாய் நிறுவனமும் இறுதியான தாய் நிறுவனமும் இலங்கை அரசாங்கம் ஆகும்.

**1.3 முதன்மைச் செயற்பாடுகளும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் இயல்பும்**

இச்சபையின் முதன்மைச் சொயற்பாடுகளாக அமைவது பொதுக் காப்புறுதி நடவடிக்கைகளும் மீள்காப்புறுதி நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகும்.

மேலும், சபையானது SRCC & T நிதியத்தையும் பராமரித்து வருகின்றது. இலங்கையில் செயற்படும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து வரிக்குப் பின் கிடைக்கும் இலாபத்தில் 1% இனை பயிர் வரியாக சபையினால் சேகரிக்கப்படுகின்றது. அத்தோடு, பயிர் வரி முறைமையின் மூலம் விவசாயக் காப்புறுதி திட்டமும் வழங்கப்படுகின்றது. மீளாய்வாண்டில் சபையின் முதன்மை நடவடிக்கைகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

**1.4 நிதிநிலை அறிக்கை தொடர்பான பொறுப்பு**

இந்நிதி நிலைக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் முன்னளிப்புச் செய்வதற்கும் பணிப்பாளர் சபை பொறுப்பினைக் கொண்டுள்ளார்கள்.

**1.5 ஊழியர்களின் எண்ணிக்கை**

2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டின் ஊழியர் வலு 238 (2017 – 211) ஆக இருந்தது.

**1.6 பணிப்பாளர் சபையினால் நிதிநிலை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்குதல்**

2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான சபையின் நிதிநிலை அறிக்கை அனுமதிக்கப்பட்டாலும், 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆந் திகதியன்று பணிப்பாளர் சபைக் கூட்டத் தீர்மானத்தின் படி அத்திகதியிலே வெளியிடுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன.

**2. தயாரித்தல் மற்றும் முக்கிய கணக்கியல் கொள்கைகளின் அடிப்படையில்**

**2.1 இணக்கக் கூற்று**

வேறுவகையில் குறிப்பிட்டால் அன்றி, இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் (CA- இலங்கை) பிரகடனப்பத்தப்பட்ட இலங்கை கணக்கியல் தரநியமங்களுக்கு இணங்கவும், 2000 இலக்கம் 43 இன் நிதியியல் காப்புறுதி தொழிற் துறை ஒழுங்குவிதியின் தேவைகளுக்கு ஏற்பவும் இந்நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்நிதி நிலை அறிக்கைகள் பின்வரும் கூறுகளைக் கொண்டுள்ளன:

- ஆண்டு முடிவிற்கான சபையின் நிதி நிலை அறிக்கையை தெளிவுபடுத்தும் தகவல்களை உள்ளடக்கிய நிதி நிலை தொடர்பான அறிக்கை. (பக்கம் 02)
- மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான சபையின் நிதிச் செயலாற்றுகையை விளக்கும் தகவல்களை உள்ளடக்கிய விரிவான வருமான தொடர்பான அறிக்கை. (பக்கம் 01)
- சமபங்குகளின் அனைத்து மாற்றங்களையும் எடுத்துக்காட்டும் பங்கு மாற்றங்களின் அறிக்கை. (பக்கம் 03)
- சபைக்கு காசு மற்றும் காசையொத்த சொத்துக்களை உருவாக்குவதற்கும், அவ்வாறான காசுப் பாய்ச்சலைப் பயன்படுத்துவதற்கும் சபையிடம் காணப்படும் திறமை தொடர்பான தகவல்களை பரீட்சிப்பவர்களுக்கு வழங்கப்படும் காசுப் பாய்ச்சல் அறிக்கை (பக்கம் 04) மற்றும்
- கணக்கியல் கொள்கைகள் மற்றும் பிற விளக்க தகவல்களை உள்ளடக்கிய நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் (பக்கம் 05 முதல் 42 வரை).

### 2.2 கணக்கிடப்படுவதற்கான அடிப்படை

இந்நிதி நிலை அறிக்கைகளில் பின்வரும் பொருட்களைத் தவிர வரலாற்றுச் செலவுகளை அடிப்படையாகக் கொண்டு இந் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

| பொருட்கள் | அளவீட்டின் அடிப்படை | குறிப்பு இல. |
|---|---|---|
| கடன்கள் மற்றும் கிடைக்கப்பெறவுள்ள நிதிச் சொத்துக்கள் | நியாயமான பெறுமதியில் | 9.1 |
| விற்பனைக்காகவுள்ள நிதிச் சொத்துக்கள் | நியாயமான பெறுமதியில் | 9.2 |
| வரையறுக்கப்பட்ட நலன் கடமைகள் | வரையறுக்கப்பட்ட பயன் கடமைகளின் தற்போதைய பெறுமதி உண்மையாக மதிப்பிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. | 18 |
| கொள்கைதாரர்களின் பொறுப்புக்கள் | IRCSL இனால் வழங்கப்பட்ட நடைமுறை வழிகாட்டுதலின் அடிப்படையில் உண்மையாக நிர்ணயிக்கப்பட்ட பெறுமதிகள் | 17.1 |
| ஏற்பட்டது ஆனால் அறிக்கையிடப்படவில்லை / ஏற்பட்டது ஆனால் போதுமானளவு அறிக்கையிடப்படவில்லை | இயல்பான முறைகளின் அடிப்படையில் இயல்பாக தீர்மானிக்கப்பட்ட பெறுமானங்கள் | 17.3 |

### 2.3 நிதி அறிக்கைகளின் முன்னளிப்பு

சபையானது அதன் ஒப்பீட்டளவில் பணப்புழக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் விஸ்தீரனமாக தனது நிதிநிலை அறிக்கையை முன்வைக்கிறது. நிதி அறிக்கைகளைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளில் எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை.

அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்ய சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை இருக்கும் போது மாத்திரமே நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிக் கடன்கள் ஈடுசெய்யப்படுகின்றன மற்றும் தேறிய தொகை நிதி நிலை அறிக்கையின் மூலம் வெளியிடப்படுகின்றன. அத்தோடு, தேறிய அடிப்படையில் ஈடுசெய்வதற்கு அல்லது சொத்தை மதிப்பிட்டு ஒரே நேரத்தில் பொறுப்பை தீர்க்கும் எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

### 2.4 பணப்புழக்கம் மற்றும் முன்னளிப்பு நாணய அலகு

நிதி அறிக்கைகளில், சபையின் புழக்கத்தில் உள்ள நாணயம் இலங்கை ரூபாயில் (LKR) வழங்கப்படுகின்றது. இது சபையின் புழக்கத்தில் உள்ள நாணயமாகும். இதனை வேறு விதமாக குறிப்பிடும் போது, இலங்கை ரூபாயில் வழங்கப்பட்ட அனைத்து நிதித் தகவல்களும் கிட்டிய ரூபாய்க்கு மட்டப்படுத்தியுள்ளது.

### 2.5 பொருள் மற்றும் திரட்டுதல்

ஒவ்வொரு பொருட்களினது வகுப்பும் ஒத்த பொருட்களாக வெவ்வேறாக வழங்கப்படுகின்றன. வேறுபட்ட தன்மையுள்ள பொருட்கள் அல்லது செயல்பாட்டின் உருப்படிகள் தனித்தனியாக வழங்கப்படுகின்றன.

### 2.6 அறிக்கையிடும் காலம்

அறிக்கையிடல் காலம் 2018 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையாகும்.

பொருத்தமான இடங்களில், சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப அடுத்தடுத்த குறிப்புகளில் கணக்கியல் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன.

### 2.7 குறிப்பிடத்தக்க கணக்கியல் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

இலங்கை கணக்கியல் தரநியமங்கள் / SLFRSs இற்கு இணங்க நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல், அறிக்கையிடப்பட்ட சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் குறித்த கணக்கியல் கொள்கைகளின் பயன்பாட்டைப் பாதிக்கும் முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை மேற்கொள்ள முகாமைக்குத் தேவையாகும். உண்மையான முடிவுகள் இந்த மதிப்பீட்டிலிருந்து வேறுபடலாம்.
கணக்கியல் முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கியல் மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடு செய்யப்படும் காலத்திலும் மற்றும் தாக்கங்களுக்கு உட்பட முடியுமான எதிர்காலத்திலும் மேற்கொள்ளபப்படும் கணக்கியல் மதிப்பீடுகள் இனங்காணப்படுகின்றன.

